வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 27.02.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 58 பக்கங்கள் : 12

# இந்திய மீனவர்களை கண்டித்து ஞாயிறன்று கடலில் போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப்ரவரி 27

**இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்.மாவட்ட கடற்பகுதிகளில் கறுப்புக் கொடி போராட்டமொன்றை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் ஸ்ரீகந்தவேள் புனிதப் பிரகாஷ் தெரிவித்தார்.**

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எல்லை தாண்டிய இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து கடலில் கறுப்புக் கொடிகளைத் தாங்கி நமது துக்கத்தை வெளிப்படுத்தவுள்ளோம்.

இந்திய மீனவர்களினால் யாழ். மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரமும் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகின்ற நிலையில் எமது பிரச்னை தொடர்பில் இந்திய அரசாங்கத்துக்கும்

11



# பொலிஸ் மா அதிபராக தென்னக்கோன் நியமனம்

நாட்டின் 36ஆவது பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நேற்று நியமிக்கப்பட்டார்.

இதற்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடமிருந்து நேற்று திங்கட்கிழமை அவர் பெற்றுக்கொண்டார்.

தேசபந்து தென்னக்கோன் கடந்த வருடம் நவம்பர் 29 ஆம் திகதி பதில் பொலிஸ் மா அதிபராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்டார. இவரின் பதவிக்காலம் நாளை புதன்கிழமையுடன் நிறைவடையும் நிலையிலேயே அவர் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார் (ஐ)

# எட்கா உடன்பாடு குறித்து வீண் அச்சம் தேவையற்றது

## கூறுகிறார் அலி சப்ரி



கொழும்பு, பெப். 27

“ இந்தியாவுடன் கைச்சாத்திடப்படவுள்ள எட்கா உடன்படிக்கை தொடர்பில் வீண் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. அந்த உடன்படிக்கை மூலம் இலங்கையின் ஊழியர் படையணிக்கு

11

# இணைய பாதுகாப்பு சட்டம் தவறானது

கொழும்பு, பெப். 27

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் இணைய பாதுகாப்பு சட்டதிற்கு சபாநாயகர் சான்றளித்தமை தவறு என பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இணைய பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பாராளுமன்றம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு அவ நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

சட்டமூலமொன்று பாராளுமன்றில் முன்வைக்கப்பட வேண்டுமாயின் பாராளுமன்ற

11

# வழக்கை எதிர்கொள்வதிலும் தமிழ் அரசு கட்சிக்குள் பிளவு

யாழ்ப்பாணம், பெப். 27

இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு எதிரான வழக்குகளை ஒரு சட்டத்தரணி குழுவின் ஊடாக எதிர்கொள்வதென கட்சித் தலைமையால் முன்வைக்கப்பட்ட ஆலோசனையை மத்தியகுழுவின் பெரும்பாலான அங்கத்தவர்கள் ஆமோதித்த நிலையில் இருவர் அதற்கு மாறான தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

பதில் செயலாளர் ப. சத்தியலிங்கம், நிர்வாக செயலாளர் குலநாயகம் ஆகியோர் தமக்கான சட்டத்தரணிகளை தாமே நியமிப்போம் என்று தெரிவித்துள்ளனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பொதுக்குழு,

11

# எமது கட்சியில் போட்டியிடுவதா இல்லையா என்பதை ரணிலே தீர்மானிக்க வேண்டும்

## மகிந்த ராஜபக்ஷ இப்படி பதில்



கொழும்பு, பெப். 29

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது கட்சியின் உறுப்பினரல்ல - எமது கட்சியில் போட்டியிடுவதா இல்லையா என்பதை அவர் முதலில் தீர்மானிக்க வேண்டும். பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியதும் அரசியல் கூட்டணி தொடர்பில் பேச்சில் ஈடுபடுவோம் - இவ்வாறு சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ எம். பி. கூறினார்.

பெரமுன கட்சியின் உறுப்பினர்களை அவர் நேற்று பத்தரமுல்லையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று சந்தித்துப் பேசினார். இதன்பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் அளித்த பதில் அப்படியே வருமாறு,

**கேள்வி** - முக்கிய விடயங்கள் ஏதும் பேசப்பட்டதா ?

**பதில்** - எந்நாளும் விசேட பேச்சுகள்தான்.

11

# நாய்கடித்து இளைஞன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 27

மூச்சுவிட சிரமப்பட்ட இளைஞன் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்தார்.

மணற்பகுதி ஆவரங்கால் கிழக்கு பகுதியைச் சேர்ந்த பிரதாபன் சாலமன் (வயது 22) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த இளைஞன் மூச்சுவிட சிரமப்பட்ட

11


# பிரிட்டன் தூதுவரை சந்தித்தது ரெலோ!

கொழும்பு, பெப். 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்துக்கும் பிரித்தானிய தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று திங்கட்கிழமை கொழும்பில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்றது.

பிரித்தானியா சார்பில் இலங்கைக்கான புதிய தூதுவர் அன்ட்ரூ பற்றிக் மற்றும் சமாதானம் மற்றும் மனித உரிமைக்கான செயலாளர் ஹென்றி டொநாட்டி ஆகியோரும் ரெலோ சார்பில் கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்,

11



# பொதுஜன பெரமுன தவிர்ந்த ஏனைய கட்சிகளுடன் கூட்டணிக்குத் தயார்!

## சம்பிக்க ரணவக்க கூறுகிறார்

கொழும்பு, பெப். 27

பொதுஜன பெரமுன தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகளுடன் புதிய கூட்டணி ஒன்றை அமைப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும்



11

# சிறீ லங்கன் விமான சேவைக்கு மீண்டும் பெரும் நெருக்கடிநிலை

கொழும்பு, பெப். 27

சிறீ லங்கன் எயார் லைன்ஸ் விமானிகள் மற்றும் பொறியியலாளர்கள் அண்மையில் மேற்கொண்ட பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக சிறீலங்கன் விமான சேவையைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

சிறீ லங்கன் விமான சேவையை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

தமிழ் திரைப்படம் ஒன்றில் வந்த நகைச்சுவைக் காட்சிபோல, ‘வரும் ஆனா வராது’ என்று சொல்லிக் கொண்டிருந்த ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் நடக்கும் என்பதுபோல தெற்கில் நடக்கும் சம்பவங்கள் தெரிகின்றன.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்கவேண்டும் என்பதில் அவ்வப்போது ஆர்வம் காட்டி வந்தவர் ரணில் விக்கிரமசிங்க. அதற்கு காரணமும் இல்லாமல் இல்லை.

அந்தப் பதவியை தேர்தல் ஒன்றின் மூலம்தான் அடைய முடியாது என்பதால் அவர் அப்படியொரு விருப்பத்தைக் கொண்டிருந்திருக்கலாம்.

இப்போதும் அவர் ஜனாதிபதி தேர்தல் ஒன்றில் நிச்சயமாக வெற்றிபெறக்கூடிய அளவுக்கு மக்களின் ஜனரஞ்சக கவர்ச்சி கொண்ட தலைவர் அல்ல. அதனால், ஜனாதிபதி தேர்தல் ஒன்றில் மீண்டும் போட்டியிட்டு பரீட்சித்துப் பார்ப்பதைவிட, அந்தப் பதவியை இல்லாமல் செய்து பாராளுமன்றத் தேர்தலின் ஊடாக நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமராக வருவதற்கே அவர் முயற்சிசெய்வார் என்று தெற்கில் பரவலாக எதிர்பார்க்கப்பட்ட நிலையிலேயே அவரும் தனது காய்நகர்த்தல்களைச் செய்துகொண்டிருந்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதுதொடர்பாக ஆராய்வதற்காக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் குழு ஒன்றை நியமித்தார். கூடவே முதலில் பாராளுமன்றத் தேர்தல் நடக்கவிருப்பதாக செய்தி ஒன்றை கசிய விட்டார். இப்படி அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்று தெரியாமல் எதிர்க் கட்சிகளை குழப்பிவிடும் பணியை செய்துகொண்டிருந்தார்.

ஆனால், அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்கமுடியாது என்பதும், பாராளுமன்றத்தில் நிறைவேற்று அதிகார ஆட்சிமுறையை நீக்குவது தொடர்பாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தீர்மானத்தைக் கொண்டுவந்தாலும் அதற்கும் மேலாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றும் நடத்தப்படவேண்டும் என்பதால் இவை எல்லாம் இப்போது உடனடியாக சாத்தியமாகப்போவதில்லை என்பது தெரிந்ததுதான்.

இவ்வாறு பல்வேறு வியூகங்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்துகொண்டிருந்தாரே தவிர, ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடப் போவதாகக்கூட உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

இதனால், அரசியலமைப்பு சட்டத்தின்படி ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றபோது அவர் சிலவேளை போட்டியிடுவதிலிருந்தும் விலகலாம் என்ற எண்ணம் பலருக்கு இருந்தது.

அத்தகைய எண்ணத்தில் இருந்தவர்களில் முக்கியமானவர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க. ரணில் திடீரென்று போட்டியிலிருந்து விலகினால் பொதுவேட்பாளராக தான் களம் இறங்கலாம் என்ற எண்ணத்தில் இருந்த சம்பிக்க அதற்காக தயாரிப்பு பணிகளிலும் தீவிரமாக இருந்தார்.

ஜே. வி. பியின் பிரசாரம் ஊழலுக்கு எதிரானதாக இருந்ததே தவிர, இந்த நாட்டை மீண்டும் எப்படிக் கட்டியெழுப்பப் போகிறார்கள் என்பதிலோ அல்லது, வீழ்ந்து கிடக்கும் பொருளாதாரத்தை எப்படி தூக்கி நிமிர்த்தப் போகிறார்கள் என்பதிலோ அவர்களிடமே திட்டம் எதுவும் இருக்கவில்லை.

எனவே, ஊழலுக்கு எதிரான முகமாக தன்னை ஏற்கனவே முன்னிறுத்தியுள்ள சம்பிக்க, நாட்டை எப்படி தன்னால் முன்னோக்கியும் நகர்த்த முடியும் என்றும் தனது திட்டங்களை அறிவித்தார். இது ஜே. வி. பிக்கு எதிரான பொருத்தமான வேட்பாளர்தான்தான் என்பதை வெளிப்படுத்தும் என்றும் அவர் நம்பினார்.

கடைசியாக தனது ஐக்கிய குடியரசு முன்னணி சார்பில், ‘நமது தேசத்திற்காக ஒற்றுமையுடன் ஒரு அடி முன்னோக்கி’ என்ற தலைப்பில் பன்னிரண்டு அம்சக் கொள்கை பிரகடனம் ஒன்றையும் வெளியிட்டிருந்ததுடன், அதுதொடர்பாக அரசியல் கட்சிகளுடன் உரையாடல் ஒன்றையும் ஆரம்பித்திருந்தார்.

அந்த உரையாடலுக்காக கடந்த வாரம் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியின் குழுவைச் சந்தித்த சம்பிக்க, தனது யோசனைகள் குறித்து விளக்கமளித்தார்.

அந்தச் சந்திப்பு இரு தரப்பினரிடையேயும் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தியிருப்பதாக சம்பிக்கவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. ரணில் போட்டியிலிருந்து விலகுவார் என்ற எதிர்பார்ப்புடன், தனது வேலைத்திட்டங்களை செய்துவந்த சம்பிக்க, அவர் நிச்சயம் போட்டியிடுவார் என்றதும்-

அதுமாத்திரமன்றி அவர் ராஜபக்ஷக்களின் வேட்பாளராக இல்லாமல் சுயேச்சை வேட்பாளராக- கட்சிசாராத வேட்பாளராக களம் இறங்கவிருப்பதாக தெரிவித்ததைத் தொடர்ந்து அவருடன் இணைந்து பணியாற்ற சம்மதம் தெரிவித்திருக்கிறாராம்.

இதனையடுத்து, தனக்கு ஆதரவுதர தயாராக இருக்கும் அணிகளை அதாவது ஐக்கிய தேசியக் கட்சி, நிமல் லான்சா உருவாக்கியுள்ள புதிய கூட்டணி, மற்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறி தனித்து இயங்கிவரும் நிமல் சிறிபால சில்வா- மகிந்த அமரவீர- துமிந்த திஸநாயக்க அணி என்று அனைத்து தரப்பினரையும் ஒன்றுபடுத்தி பலமான கூட்டணி ஒன்றை அமைக்கும் பணியை தலைமை தாங்கி செய்யுமாறு சம்பிக்கவை கேட்டிருக்கிறாராம் ரணில்.

தனக்கு சர்வதேச ஆதரவு பலமாக இருப்பதையும், விரைவில் உலக வங்கி நூறு கோடி டொலர் கடன் வழங்க சம்மதம் தெரிவித்திருப்பதையும் தெரிவித்த ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்று தொடந்து செல்வதா இல்லையா என்பது குறித்து விரைவில் சர்வகட்சி கூட்டம் ஒன்றை நடத்தி அனைத்துக் கட்சிகளின் சம்மதத்தையும் பெற விருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

இவை எல்லாம்தான் வெற்றி பெறுவதற்காக தான் முன்னெடுத்துவரும் முயற்சிகள் என்பதை சம்பிக்க புரிந்துகொண்டிருப்பார் என்ற நம்பிக்கையை ஜனாதிபதி பின்னர் தனது கட்சிக்காரர்களுடன் பகிர்ந்து கொண்டாராம்!

- ஊர்க்குருவி.

# இலங்கை அரசு போலவே தமிழக அரசும் இலங்கைத் தமிழர்களை நோக்குகிறதா?

## கேள்வி எழுப்புகின்றார் ரவிகரன்

முல்லைத்தீவு, பெப். 27

இலங்கை அரசை போலவே முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசும் இலங்கைத் தமிழர்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நோக்குகிறதா என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யுத்த வடுக்களுடன் பலத்த துன்ப, துயரங்களுடன் வாழும் இலங்கையின் வட பகுதித் தமிழ் மீனவர்களின் பாதிப்பு நிலைகளை உணர்ந்து தமிழ்நாடு அரசும் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களும் செயற்படவேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி எல்லை தாண்டி இலங்கையின் கடற்பரப்புக்குள் நுழைந்து தமது சட்ட விரோத கடற்றொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக, இலங்கையின் வட பகுதி கடற்பரப்புக்களான முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் கடற்பரப்புகளுக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து இழுவைமடி மீன்பிடிச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்திய மீனவர்களின் இத்தகைய அத்துமீறிய வருகையால் இன்றளவும் யுத்த வடுக்களுடன் வாழும் வட பகுதித் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தென்னிலங்கை மீனவர்களுடைய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளால் எமது வட பகுதி மீனவர்கள் மிக மேசமாகப் பாதிப்புக்குள்ளாகி வரும் நிலையில், இந்திய மீனவர்களின் அத்துமீறிய மற்றும் சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளாலும் எமது கடல் வளங்கள் அழிக்கப்பட்டு, எமது மீனவர்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்படுகின்றன. இதனை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்நிலையில் தொப்புள் கொடி உறவுகளான தமிழ்நாட்டு மக்கள் எமக்கு உதவுவார்கள் என எண்ணிக்கொண்டிருக்கும்போது, தமிழ்நாட்டிலிருந்தும், பாண்டிச்சேரியிலிருந்தும் சில இழுவைமடித் தொழிலாளர்களால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது.

எமது மீனவர்களின் இத்தகைய பாதிப்பு நிலைமைகள் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மீனவர்களுக்கு புரியவில்லையா? தமிழ்நாடு முதல்வருக்கும், அங்குள்ள ஏனைய அரசியல் பிரதிநிதிகளுக்கும் எமது மீனவர்களின் இத்தகைய அவலநிலைகள் புரியவில்லையா?

எம்மை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நோக்கும் இலங்கை அரசைப் போலவே, தமிழ்நாடு அரசும் அங்குள்ள எமது தொப்புள்கொடி தமிழ் உறவுகளும் எம்மை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நோக்கினால் நாம் என்ன செய்வது?

இவ்வாறான நிலையில், தற்போது இலங்கை அரசும், தமிழ்நாடு அரசும் சேர்ந்து எம்மை அழித்துவிடுங்கள் என்று கூறுவதைத் தவிர எம்மால் வேறேதும் கூற முடியாதுள்ளது-என்றார்.

# புத்தளத்தில் போதைப்பொருள் விற்பனை நிலையம் முற்றுகை!

கொழும்பு, பெப். 27

புத்தளம் பகுதியில் அனுமதியற்ற மருந்தகம் ஒன்றில் சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான போதை மாத்திரைகள் கைப்பற்றியதாகத் தேசிய போதைப் பொருள் ஒழுங்குமுறை அதிகார சபை தெரிவித்துள்ளது.

தேசிய போதைப் பொருள் ஒழுங்குமுறை அதிகார சபை மற்றும் புத்தளம் மாவட்ட உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர்கள் ஆகியோருக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த நிலையம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது .

புத்தளம் மாவட்ட உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர்கள் கடுமையான எச்சரிக்கைகளை விடுத்து, அந்த இடத்திலிருந்து போதை மாத்திரைகளை அகற்றுமாறு முன்னரே அறிவித்திருந்த போதிலும் தொடர்ந்தும் செயற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான பல்வேறு வகையான போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. (அ)

# வவுனியா புதிய பஸ் நிலையம் அருகே நிறுத்திய மோட்டர் சைக்கிள் திருட்டு!

வவுனியா, பெப். 27

வவுனியா, புதிய பஸ் நிலையம் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டர் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, புதிய பஸ் நிலையம் அருகில் மோட்டர் சைக்கிள் ஒன்றை இரவு நிறுத்திவிட்டு கொழும்பு பயணித்த ஒருவர் மறுநாள் பகல் வந்து பார்த்தபோது அது நிறுத்திய இடத்தில் காணப்படவில்லை.

அப் பகுதியில் தேடிய போதும் மோட்டர் சைக்கிள் கிடைக்காத நிலையில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாடு தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, மோட்டர் சைக்கிள்களை பொது இடங்களில், வீதியோரங்களில் நிறுத்திவிட்டு தூர பயணங்களை மேற்கொள்ளாமல் அவற்றை பாதுகாப்பான இடத்தில் நிறுத்திவிட்டு செல்லுமாறு வவுனியா பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (அ)

# பாடசாலையில் 13 கணினிகள் திருட்டு

கொழும்பு, பெப். 27

பேருவளை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் 78 இலட்சம் ரூபா பெறுமதியான 13 கணினிகள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் .

அதிபர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நீண்ட வார விடுமுறைக்காகப் பாடசாலை மூடப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கூட்டமொன்றிற்காகப் பாடசாலை உதவியாளரால் திறக்கப்பட்டுள்து.

இதன்போது ஆசிரியர் ஓய்வறையின் கதவு திறந்து கிடப்பதைக் கண்ட உதவியாளர் உள்ளே சென்று பார்த்தபோது கதவு உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டிருந்தன.

இதனையடுத்து பாடசாலை உதவியாளர் அதிபருக்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்ததையடுத்து, அவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 2021ஆம் ஆண்டு கொரிய அரசாங்கத்திடம் இருந்து இந்த கணினிகள் உதவியாகப் பெறப்பட்டதாகவும், ஒவ்வொரு கணினியின் மொத்த பெறுமதி 60,000 ரூபா எனவும் அதிபர் செய்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
27.02.2024 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், மாசி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கட்சியின் பிரச்னையை கையாள முடியாதவர்கள்

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இந்தியாவில் இடம்பெற்ற சிந்தனைக்கூட நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டிருக்கின்றார் - இதன்போது, வடக்கு, கிழக்கில் சீனாவை தமிழ் மக்கள் வரவேற்க வில்லை, இந்தியாவின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு, நாங்கள் அதனை ஆதரிக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார். இவ்வாறு குறிப்பிடு வதால், இந்தியா மகிழ்ச்சியடையுமென்று சாணக்கியன் எண்ணியிருக் கலாம்போலும் - அவ்வாறு எண்ணினால் அது நகைப்புக்கிடமானது.

ஏனெனில், சீனாவை எதிர்கொள்வது என்பது வெறுமனே பேசுவதல்ல - முதலில் இந்தியா கருத்தில்கொள்ளத்தக்க வலுவானதொரு கட்சியாக பரிணமிக்க வேண்டும். ஒரு பலமான ஐக்கிய முன்னணியாவதற்கான ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும் - அதன் பின்னர்தான் இவ்வாறான அறிக்கைகளை வெளியிட வேண்டும்.

ஆனால், நடப்பது என்ன? - இலங்கை தமிழ் அரசு கட்சியின் உள் விவகாரம் நீதிமன்றத்தில் இருக்கின்றது. ஒருவேளை தலைமைக்கான வாக்கெடுப்பில் சிறீதரன் தோல்வியடைந்திருந்தால் கட்சியின் யாப்பு தொடர்பான விவாதம் இடம்பெற்றிருக்காது - ஏனெனில், யாப்பில் உள்ள குளறுபடிகள் தெரிந்தே அனைவரும் தேர்தல் மூலமான முடிவை எதிர் பார்த்திருந்தனர். ஆனால், சிறீதரன் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, தற்போது கட்சியின் யாப்பு தொடர்பில் பேசப்படுகின்றது. சாணக்கியனால் அவர் பிரதிநிதித்துப்படுத்தும் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே தமிழ் அரசு கட்சியின் பெரும்பான்மையானவர்களின் ஆதரவைத் தக்கவைக்க முடியில்லை - இவ்வாறான ஒருவர், வடக்கு, கிழக்கில் சீனாவை எதிர் கொள்வது பற்றி பேசுவதை நகைச்சுவையாகவே நோக்க முடியும்.

தமிழ்த் தேசிய அரசியலின் நிலைமை ‘கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை’யாகி வருகின்றது. 2009இல் யுத்தம் நிறைவுற்றபோது - யுத்தத்தின் போது இடம்பெற்றதாக நம்பப்படும் மனித உரிமைகள் மீறலும் அதன் மீதான சர்வதேச அழுத்தங்களுமே - ஒரேயொரு நம்பிக்கையாக இருந் தது. ஆனால், 14 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், இன்று அனைத்து முயற்சிகளுமே புஷ்வாணமாகிவிட்டதா என்னும் கேள்வியுடனேயே அரசியல் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் சீனாவை எதிர்கொள்ளப் போவதாக கூறுவதை என்னவென்பது? தமிழ் மக்கள் அடிப்படையிலேயே சிந்திக்கத் தெரியாதவர்கள் என்றா நமது அரசியல் வாதிகள் எண்ணுகின்றனர்?

இலங்கைத் தமிழ் அரசு கட்சியில் புதியவர்களை உள்வாங்க வேண்டும் - அது அவசியமானதும்கூட ஆனால், அவ்வாறு புதியவர்களை உள்வாங் கும்போது நேர்த்தியான ஒழுங்குகள் பின்பற்றப்பட வேண்டும். ஆனால் அது பின்பற்றப்படவில்லை. இன்று ஏற்பட்டிருக்கும் பல குழப்பங்களுக்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

தமிழ்த் தேசியம் தொடர்பில் பேசிக் கொண்டாலும்கூட, தமிழத் தேசியத் தின் அடிப்படையில் புதியவர்கள் உள்வாங்கப்படவில்லை. இது யாருடைய குற்றம்? கட்சியின் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்தியவர்களே பிரதான குற்றவாளிகளாவர். முதல் குற்றவாளி இரா. சம்பந்தன் என்றால் - அடுத்த குற்றவாளி மாவை. சேனாதிராசா ஆவார். நிதிபலமுள்ளவர்கள் எவர் வேண்டுமனாலும் கட்சிக்குள் வரலாம் - அவ்வாறானவர்கள் கட்சியின் மூத்த தலைவர்களின் கதவுகளை தட்டினால், அது தாராளமாகவே திறக்கும் என்னும் கணிப்பே இன்று தமிழ் அரசு கட்சி தொடர்பில் நிலவுகின்றது. சாணக்கியன் போன்றவர்களை உள்வாங்கும் போது, தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத்தின் மூத்த உறுப்பினர்களின் கரிசனைகள் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இன்று தமிழ் அரசு கட்சியின் பிரச்னை நீதிமன்றம் சென்றமைக்கு இதுவும் ஒரு பிரதான காரணமாகும்.

முதலில் கட்சியின் ஆற்றலை நிரூபியுங்கள் - தமிழ்த் தேசியத்தின் பெயரால் சிதறி - மோதிக் கொண்டிருக்கும் கட்சிகள் அனைத்தையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவாருங்கள் - அதன் பின்னர் சர்வதேச விடயங் கள் தொடர்பில் கவனிக்கலாம்.

# இரு லொாறிகள் மோதி விபத்து; ஒருவர் மரணம் இருவர் காயம்

கொழும்பு, பெப். 27

தெற்கு அதிவேக நெடுஞ் சாலையின் கஹதுடுவ மற்றும் கொட்டாவைக்கு இடையிலான பகுதியில் இரு லொறிகள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்துள் ளனர்.

இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற் றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் ரத்கம பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடைய லொறி சாரதியாவார்.

ரத்கம பிரதேசத்தில் இருந்து பேலியகொடை மீன் சந்தைக்கு மீன் கொள் வனவு செய்யவதற்காக பயணித்த லொறி ஒன்று அம்பாந்தோட்டை பிரதே சத்தில் இருந்து குருநாகல் பிரதேசத்திற்கு சிமெந்து ஏற்றி கொழும்பு பிரதே சத்தை நோக்கி பயணித்த மற்றுமொரு லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து விபத் தில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்தார் அதிவேக நெடுஞ்சாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)

# அவுஸ்திரேலிய பெற்றோலிய நிறுவனத்தால் இலங்கையில் 150 எரிபொருள் நிலையங்கள்

கொழும்பு, பெப். 27

யுனைடெட் பெற்றோ லியம் அவுஸ்திரேலியா பிரைவேட் லிமிடெட் இலங்கையின் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச் சுடன் உள்ளூர் சந்தையில் பெற்றோலிய பொருட் களை வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத் தின் சார்பில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுலக் ஷனா ஜயவர்தன மற்றும் யுனைடெட் பெற்றோலியம் அவுஸ்திரேலியா சார்பாக அதன் நிறுவனத்தின் உரிமையாளர் என்ற வகையில் எடி ஹேர்ஸ் ஆகி யோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்குச் சொந்தமான பெற்ரோலிய சில்லறை விற்பனையாளர் மற்றும் இறக்குமதியாள ருக்கு இலங்கை முழுவதும் 150 எரிபொருள் நிலையங் கள் ஒதுக்கப்பட்டுள்ளன, மேலும் 50 புதிய எரிபொ ருள் நிலையங்களை நிர்மா ணிப்பதற்கான உரிமையும் வழங்கப்பட்டுள்ளது.

(அ)

# வடமராட்சி கிழக்கு கடலில் பிடிபட்டது இராட்சத சுறா



யாழ்ப்பாணம், பெப். 27

வடமராட்சி கிழக்கு கடல் பகுதியில் பெரியளவி லான சுறா மீன் ஒன்று கடற் தொழிலாளரின் வலையில் சிக்கியுள்ளது.

குறித்த சுறா சுமார் 3 ஆயிரத்து 700 கிலோ கிராம் என தெரிவிக்கப்படுகின் றது.

வடமராட்சி கிழக்கு உடுத்துறை பகுதியைச் சேர்ந்த கடற்தொழிலாளர் ஒருவரின் வலையில் சிக்கிய பெரியளவிலான சுறா கடு மையான போராட்டத்தின் மத்தியில், சக கடற்றொழி லாளர்களின் உதவியுடன் கரைக்கு கொண்டு வரப் பட்டது.

(அ)

# மாணவர் ஒன்றிய இணைப்பாளர் சி.ஐ.டியால் கைது!

கொழும்பு, பெப். 27

களனி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட் டார்.


குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொது முறைப் பாடுகள் பிரிவினரால் கெலும் முதன்நாயக்க கைது செய்யப்பட்டார்.

அண்மையில் பல்கலைக் கழக வளாகத்தில் புதிய மாணவர்களை பகிடிவதை செய்த சம்பவம் தொடர் பில் அவர் கைது செய்யப் பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளி நாடு செல்ல முற்பட்ட போதே அவர் கைது செய்யப்பட்டார்.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பெப்ரவரி - 27 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 15

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 07.30 - 09.00 |
| ராகு காலம் | : | 03.00 - 04.30 |
| திதி | : | திரிதியை |




**மேடம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

**இடபம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். பழைய நினைவுகளில் மூழ்கும்நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். சொத்துப் பிரச்னைக்கு சுமூகத் தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். திடீர் பணவரவு உண்டு. வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் அவ்வபோது டென்ஷன் ஆவீர்கள்.

**துலாம்**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. பழையகடனை தீர்க்க முயற்சி செய்வீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாகப் பழகுங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**தனுசு**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். சாதிக்கும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள்முக்கிய அறிவுரைத் தருவார்கள். உற்சாகமான நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்.

**மீனம்**
சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலியவந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

# பாராளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடமாட்டேன்!

## நாம் தமிழர் கட்சியின் சீமான்

*திருச்சி, பெப். 27*


*மக்களவைத் தேர்தலில் தான் போட்டியிட போவதில்லை என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.*

*திருச்சியில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த சீமான்,*

*"மக்களவை தேர்தலில் நான் போட்டியிட போவதில்லை. தனித்துப் போட்டி என்று ஏற்கனவே நாங்கள் அறிவித்துவிட்டோம். எனினும், கூட்டணி அமைக்க சிலர் எங்களிடம் பேசியது உண்மைதான். இரகசியமாகப் பேசினார்கள். அவர்கள் இரகசியமாகப் பேசியதை பொது வெளியில் சொல்வது மாண்பாக இருக்காது.*

*வாக்கு இயந்திரத்தில் தவறுகள் நடக்க வாய்ப்பு உள்ளது. இந்தியா, நைஜீரியா, பங்களாதேஷ் தவிர உலகின் எந்த நாடுமே வாக்கு இயந்திரங்கள் முறையை பயன்படுத்தவில்லை. அதிலும் கடந்த தேர்தலில் வாக்குப் பதிவு இயந்திர முறையை பங்களாதேஷும் கைவிட்டுவிட்டது.*

*வாக்குப் பதிவு இயந்திரத்தை தயாரித்து தரும், ஜப்பானே அந்த இயந்திரத்தை பயன்படுத்துவதில்லை. ஏன் அமெரிக்காவே இதை பயன்படுத்துவதில்லை. வாக்குப்பதிவு முடிந்தபின் குறைந்தது 40 நாட்களுக்கு வாக்கு இயந்திரங்கள் மையங்களில் பூட்டிக்கிடக்கும். இப்படியான நிலையில்தான் ஒரே நாடு ஒரே தேர்தல் எனக் கூறுகிறார்கள். நான் இங்கு பேசுவதை டில்லியில் இருந்து உங்களால் ஒட்டுக் கேட்க முடியும் என்றால்,*



*வாக்குப் பதிவு இயந்திரத்தை ஹேக் செய்ய முடியாதா என்ன?*

*தேர்தல்களே நேர்மையான முறையில் நடக்கவில்லை என்றால் நேர்மையான ஆட்சி எங்கிருந்து நடைபெறும்?" என்று கேள்வி எழுப்பினார்.*

(ஐ)

# ஜெயலலிதாவின் நகைகள் ஏலத்துக்கு வருகின்றன!

சென்னை, பெப். 27

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் சொத்துகளை ஏலம் விட்டு அவருக்கு விதிக்கப்பட்ட100 கோடி (இந்திய) ரூபாய் அபராத தொகையை கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சொத்து குவிப்பு வழக்கில் கடந்த 2014ஆம் ஆண்டு பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டு சிறை தண்டனையும் ரூ.100 கோடி அபராதமும் விதித்தது. இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு 4 ஆண்டு சிறைத் தண்டனையும் தலா ரூ.10 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டிருந்தது.

இதனை எதிர்த்து ஜெயலலிதா உட்பட 4 பேரும் கர்நாடக உச்சநீதிமன்றில் மேன்முறையீடு செய்தனர். அந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் நால்வரையும் விடுதலை செய்தது.

இதைத்தொடர்ந்து கர்நாடக அரசு உச்சநீதிமன்றில் சீராய்வு மனு ஒன்றை தாக்கல் செய்தது. அதன் மீதான விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது 2016 டிசெம்பர் 5ஆம் திகதி ஜெயலலிதா உயிரிழந்தார். உச்சநீதிமன்றம் பெங்களூர் சிறப்பு நீதிமன்ற தீர்ப்பை உறுதி செய்தது.

அதே நேரத்தில் ஜெயலலிதா மீதான குற்றச்சாட்டுகளை கைவிடுவதாக கூறி விட்டு செலுத்த வேண்டிய அபராத தொகையில் எந்த மாற்றமும் இல்லை எனவும் தெரிவித்தது.

இந்த நிலையில் ஜெயலலிதா இறந்து 6 ஆண்டுகள் கடந்த நிலையிலும் அவருக்கான அவரது தொகையை யாருமே செலுத்த முன்வராததால் நீதிமன்றம் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன்படி ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கில் அவரது சொத்துகளை விற்று அபராதம் கட்டுவது என்று முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதன்படி, ஜெயலலிதா வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட 28 கிலோ தங்க நகைகள், 800 கிலோ வெள்ளி நகைகள், வைர நகைகள் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டன.

இந்த நகைகளை ஏலம் விட்டு அவரின் தொகையில் ஒரு பகுதியை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி ஜெயலலிதாவின் நகைகள் வருகிற மார்ச் 6 மற்றும் 7ஆம் திகதிகளில் தமிழகம் கொண்டு வரப்பட்டு உள்துறை செயலாளரிடம் ஒப்படைக்கப்பட உள்ளது. அதனை அரசு கருவூலத்தில் சேர்த்து பின்னர் நகையின் மதிப்பு கணக்கிடப்பட்டு தற்போதைய மதிப்பின்படி ஏலத்தில் விட்டு பணம் திரட்டப்படும் இந்த நகைகள் மட்டும் 40 கோடி ரூபாய் வரை ஏலம் போகும் எனக் கூறப்படுகின்றது. மீதமுள்ள 60 கோடி ரூபாய்க்கு அவரின் அசையா சொத்துகளை ஏலத்தில் விடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ)

# தமிழ்நாடு அரசு தடுக்கவேண்டும்!

## வைகோ வலியுறுத்து

*சென்னை, பெப். 26*

*பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க ஆந்திர அரசு தீவிரம் காட்டிவருகிறது. இந்நிலையில், உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தடையானை பெற வேண்டும் என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.*

*மதிமுக பொதுச்செயலாளர் வைகோ இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,*

*உச்ச நீதிமன்ற உத்தரவுகளை மீறி ஏற்கெனவே கர்நாடகத்தில் பாலாற்றின் குறுக்கே 3 தடுப்பணைகளும், ஆந்திர மாநிலத்தில் சிறியதும், பெரியதுமாக 21 தடுப்பணைகளும் கட்டப்பட்டதால் தமிழகத்தில் பாலாறு வறண்டு கிடக்கிறது. இது தொடர்பாக தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு நிலுவையில் உள்ளது.*

*இந்நிலையில், ஆந்திர மாநில அரசு. குப்பம் தொகுதிக்கு உட்பட்ட ரெட்டிகுப்பம் என்ற பகுதியில் பாலாற்றின் குறுக்கே கூடுதலாக புதிய தடுப்பணை ஒன்றைக் கட்ட ஏற்பாடுகள் செய்து வருகிறது. இது தொடர்பாக அந்த மாநில வனத்துறை அமைச்சர், நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில், ரெட்டிகுப்பம் பகுதியில் பாலாற்றின் குறுக்கே புதிய தடுப்பணை ஒன்று கட்டப்பட உள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி கலந்து கொண்டு தடுப்பணைக்கான பணிகளை தொடங்கி வைக்க உள்ளதாக தெரிவித்துள்ளார்.*

*உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தொடர்ந்துள்ள வழக்கு நிலுவையில் இருக்கும் போது ஆந்திர மாநில முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு இன்று (நேற்று) அடிக்கல் நாட்டுவது உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிரானதாகும். பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்பட்டால், தமிழகத்தின் வட மாவட்டங்களின் நீர் ஆதாரம் கடுமையாக பாதிக்கப்படும். இதனால் குடிதண்ணீரின்றி மக்கள் அவதிப்படுவதுடன், வேளாண் தொழிலும் முற்றாக சீரழிந்து விடும்.*

*எனவே தமிழக அரசு உடனடியாக உச்ச நீதிமன்றத்தில் ஏற்கனவே கொடுத்துள்ள வழக்கை துரிதப்படுத்தி, பாலாற்றின் குறுக்கே அணைக்கட்ட முனையும் ஆந்திர மாநில அரசின் திட்டத்தை கைவிட துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.*

(ஐ)

# மஹிந்த கூறும் வேட்பாளரை வெல்ல வைக்க மக்கள் தயார்!

**கூறுகின்றார் ரோஹித அபேகுணவர்தன**

கொழும்பு, பெப். 27

**“மகிந்த ராஜபக்சவை நேசிக்கும் மக்களே இந்நாட்டில் உள்ளனர். அவர் களமிறக்கும் வேட்பாளரை வெற்றி பெற வைப்பதற்கு மக்கள் தயாராக உள்ளனர்.” - என்று பொது ஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.**



அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அடுத்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி எமது தரப்புக்கு சவால் அல்ல. ஏனெனில் அக்கட்சியின் தலைவரிடம் தலைமைத்துவ பண்பு கிடையாது. இதை நாம் கூறவில்லை. அக்கட்சியின் உறுப்பினர்கள்தான் குறிப்பிட்டுவருகின்றனர் .

நாம் களமிறக்கியுள்ள அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் வெற்றிபெற்றுள்ளனர்.

இம்முறையும் வெற்றி வேட்பாளர் களமிறக்கப்படுவார், மகிந்த ராஜபக்ச பெயரிடும் வேட்பாளரை வெற்றிபெற வைப்பதற்கு நாட்டு மக்கள் தயாராகவே உள்ளனர்- என்றார்.

# அதிகரித்துவரும் வெப்பநிலை; மாணவர்களுக்கு எச்சரிக்கை

කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
DEPARTMENT OF METEOROLOGY
ශ්‍රී ලංකාව இலங்கை SRI LANKA

கொழும்பு, பெப். 27

அதிக வெப்பமான காலநிலையை கருத்திற் கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு சுகாதார அமைச்சினால் சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, அதிக வெப்பநிலை நிலவும் நாட்களில் விளையாட்டு மைதானத்தில் மாணவர்கள் வெளிப்புற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதிக வெப்பநிலை நிலவும் நாட்களில் இல்ல விளையாட்டு போட்டிகள் மற்றும் பயிற்சிகளை நடத்துவதை தவிர்க்குமாறும் மாணவர்களை அதிகளவில் நீர் அருந்தச் செய்யுமாறும் சுகாதார அமைச்சின் குறித்த அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் நிலவும் வறட்சியான காலநிலையில் நேற்று முதல் ஓரளவு மாற்றத்தை எதிர்பார்க்க முடியுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# 84 இலட்சம் ரூபா மோசடி; சீனப் பெண் சிக்கினார்!

கொழும்பு, பெப். 27

84 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்தமை தொடர்பில் சீனப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று முன்தினம் கொள்ளுப்பிட்டி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜனவரி 31ஆம் திகதி கொழும்பு மோசடி விசாரணைப் பணியகத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்தே 52 வயதான இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு மோசடி விசாரணைப் பணியகம் மேற்கொண்டு வருகிறது.

# நாட்டை விட்டு வெளியேறுவோரின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 27

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளுக்கு தொழிலுக்காகச் செல்லும் இலங்கையர்களில் 41 சதவீதமானவர்கள் தொழில் வல்லுநர்கள் அல்லது ஏதோ வகையில் திறமைமிக்கவர்கள் என புலம்பெயர்ந்து செல்லும் இலங்கையர்கள் தொடர்பான அறிக்கையொன்றில் தெரியவந்துள்ளது.

வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாகவும், 2023ஆம் ஆண்டில் மாதாந்தம் வெளிநாடு சென்றோரின் எண்ணிக்கை 25,000ஆக உயர்ந்திருந்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு வருடத்தில் சுமார் மூன்று இலட்சம் இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர் அல்லது வேலைக்காக வெளிநாடு செல்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அம்பாந்தோட்டை துறைமுகத்தை மிகவிரைவில் மியன்மார் துறைமுகத்துடன் இணைக்க திட்டம்!

கொழும்பு, பெப். 27

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிக்காக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள பாரிய முதலீடுகளை தேசிய பொருளாதாரத்திற்கு நன்மை பயக்கும் வகையில் தொடர்ச்சியாக பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை மியன்மார் துறைமுகத்துடன் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அதனை கிழக்கு சீனாவின் சோங்கிங் துறைமுகம் வரையில் விரிவுபடுத்திப் பின்னர் ஆபிரிக்கா வரை அதனை மேலும் விரிவுபடுத்த எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அம்பாந்தோட்டையை நாட்டின் பிரதான பொருளாதார மையமாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகளையும் சுட்டிக் காட்டினார்.

மேற்கு, கிழக்கு மற்றும் அம்பாந்தோட்டை நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை சுட்டிக்காட்டினார்.

கொழும்பு நகரம் உட்பட மேல் மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் அம்பாந்தோட்டையில் சுற்றுலா வலயங்கள் தொடர்பான மூலோபாய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நகர அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டதுடன் புதிய முதலீட்டு வாய்ப்புகளும் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

மொனராகலை பிரதேசத்தில் மேலதிகமாகக் காணப்படும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளைப் பயன்படுத்தி புதிய முதலீட்டு வலயங்களை உருவாக்கும் திட்டம் குறித்தும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், நகர நெரிசலைக் குறைப்பதற்காக அவிசாவளை மற்றும் எஹெலியகொட உட்பட பிரதேசங்களின் மூலோபாய திறன்களைப் பயன்படுத்தி புதிய நகரங்களை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவத்தையும் இதன்போது ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஈர்த்து, பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கில் வட கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்துதல் மற்றும் தொழில்துறை மற்றும் தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை நிர்மாணித்தல் தொடர்பான திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தியாவின் உதவியுடன் திருகோணமலையை முக்கிய முதலீட்டு வலயமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. திருகோணமலை நகர அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கூட்டுக் குழுவொன்றை நியமிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, பொருளாதார வளர்ச்சி மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கு இந்திய-இலங்கை இருதரப்பு ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். (அ)

# ஆர்.ஆருக்கு ரொறன்ரோவில் அஞ்சலி





ரொறன்ரோ, பெப். 27

தமிழீழ மக்கள் மக்கள் விடுதலைக் கழகம் மற்றும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் சிரேஷ்ட உபதலைவரும் , ஜனநாயக தமிழ் தேசிய முன்னணியின் செயலாளருமான ஆர்.ஆர் என அழைக்கப்படும் தோழர் இராகவனின் ( வேலாயுதம் நல்லைநாதர் ) அஞ்சலி நிகழ்வு கனடாவின் ரொறன்ரோ நகரில் இடம் பெற்றது.

வவுனியாவில் உமாமகேஸ்வரன் சமாதியில் அவரின் உடல் அடக்கம் செய்யப்பட்ட அதே தினமான ஞாயிற்றுக்கிழமை இந்த அஞ்சலி கூட்டம் இடம் பெற்றிருந்தது. இந்த நிகழ்வினை கழக தோழர்கள், நண்பர்கள் மற்றும் சுழிபுரத்தினை சேர்ந்த அன்பர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிகழ்வில் கழகத்தின் கனடா கிளையின் பொறுப்பாளர் தோழர் க.கந்தசாமி மற்றும் பொருளாளர் இ.விஜயசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# காணி உரிமைக்கு பதிவு செய்ய அவசர தொலைபேசி இலக்கம்

கொழும்பு, பெப். 27

“உறுமய” தேசிய வேலைத் திட்டத்தின் அபிலாஷைகளை நனவாக்கி, மக்கள் தமது காணியின் முழுமையான உரிமையை அனுபவிக்கும் வாய்ப்பை வழங்கும் நோக்கில் அதற்காக விண்ணப்பிப்பதற்கு அவசரத் தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தினமும் காலை 8.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை ஜனாதிபதி அலுவலகம், உறுமய தேசிய செயற்பாட்டு அலுவலகம், 1908 என்ற அவசர தொலைபேசி இலக்கம் மற்றும் 0114 354600/ 0114 354601 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பொதுமக்கள் தமது கோரிக்கைகளைப் பதிவு செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**www.tinyurl.com/urumaya** (டிஜிற்றல் விண்ணப்பப் படிவம்) படிவத்தைப் பூர்த்தி செய்தும் இதற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நில மேம்பாட்டுக் கட்டளைச் சட்டத்தின் மூலம் விவசாயிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நிபந்தனைகளுடன் கூடிய அனுமதிப் பத்திரங்கள் / கொடுப்பனவுப் பத்திரங்கள் உள்ள அரசாங்கக் காணிகளை நிபந்தனைகளின்றி முழுமையான உரிமையை மக்களுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 2024 வரவு-செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட ஒரு தனித்துவமான முன்மொழிவாகும்.

இந்த “உறுமய” நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக முழுமையான உரிமையுடைய காணி உறுதிப்பத்திரங்களைப் பெறுவதன் மூலம், குறித்த காணிக்கு புதிய பெறுமதி கிடைப்பதுடன், அவர்களின் உரிமையைப் பாதுகாத்து அவர்களின் குடும்பத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் வாய்ப்பு உருவாகும்.

# மனிதாபிமான அடிப்படையில் மீனவர்களை விடுவியுங்கள்!

## இலங்கையிடம் இந்தியா வேண்டுகோள்

கொழும்பு, பெப். 27

**இலங்கை சிறையில் தண்டனை அனுபவித்து வரும் இந்திய மீனவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுங்கள் என்று இலங்கையிடம் இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.**


**இலங்கைக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவுக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையிலான விசேட பேச்சு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்றது.**

இதன்போதே இந்தியத் தூதுவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார். சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு இலங்கை சிறையில் 5 இந்திய மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையால் தமிழகத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி தமிழக மீனவர்களும், தமிழக மக்களும் கச்சதீவு திருவிழாவைப் புறக்கணித்தும் உள்ளனர்.

இந்நிலையிலேயே இந்திய மீனவர்களின் விடுதலை தொடர்பில் இலங்கைக் கடற்றொழில் அமைச்சருடன் இந்தியத்தூதுவர் நேற்று முன் தினம் விசேட பேச்சு நடத்தினார். இரு நாட்டு மீனவர் பிரச்னை தொடர்பில் இந்தியா - இலங்கை இடையே ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இரு நாட்டு மீனவர்களின் நலன் சார்ந்து மனிதாபிமான முறையில் மீனவர் பிரச்னையை



அணுகுமாறு இந்தியத் தூதுவர் இதன்போது வலியுறுத்தினார். அதேவேளை, இலங்கை சிறையில் தண்டனை அனுபவித்து இந்திய மீனவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்றும் இந்தியத் தூதுவர் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த இலங்கைக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "இந்திய மீனவர்கள் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் சிறையிடப்பட்டுள்ளமையால் அவர்களை விடுவிக்கும் அதிகாரம் எனக்குக் கிடையாது. இது தொடர்பில் இனி ஜனாதிபதி மாத்திரமே முடிவெடுக்க முடியும். அதேநேரம் இலங்கை மீனவர்களின் விருப்பத்துக்கு மாறாக என்னால் முடிவெடுக்க முடியாது" - என்று கூறினார்.

வடக்கு மாகாணத்தில் இந்தியாவால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்றிட்டங்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டது.

---

ஆண் குரலில் பேசி பெண்ணுடன் காதல்

# முறையற்ற படங்கள் வெளியிட்ட பெண்ணுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, பெப். 27

தன்னை ஒரு இளைஞராக இனங்காட்டி, 15 வயதுடைய ஒருவருடன் காதல் தொடர்புகளை பேணியதுடன், அவரது முறையற்ற படங்களை பெற்று சமூக வலைத்தளங்களில் வெளியிட்ட குற்றச்சாட்டில் கைதான யுவதியொருவர் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி நேற்று முன்தினம் மாத்தறை நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டதையடுத்து, இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இருவரும் சமூக வலைத்தளங்கள் மூலம் சுமார் ஒரு வருடமாக காதல் தொடர்பைப் பேணி வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சந்தேக நபரான யுவதி கைது செய்யப்பட்டதையடுத்தே தன்னிடம் இளைஞராக காதல் தொடர்புகளை பேணிவந்த நபர், ஒரு யுவதியென பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தெரியவந்துள்ளது.

கலென்பிந்துனுவெவ பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய குறித்த யுவதி சமூக ஊடகங்கள் மூலம் மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுமியுடன் தொடர்புகளை பேணிவந்துள்ளார்.

தொலைபேசியில் அவர் ஆண் ஒருவரின் குரலில் பேசியுள்ளதாகவும் தெரிவந்துள்ளது.

இந்தநிலையில், தம்மை சந்திப்பதற்கு குறித்த சிறுமி மறுத்தமையினால் சந்தேகநபரான யுவதி அவரிடமிருந்து பெற்ற முறையற்ற படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

(அ)

---

# ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, பெப். 27

ஐஸ் போதைப்பொருளுடன் அநுராதபுரம் தலைமையக பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிள் 30 வயதுடைய மாவனெல்லை பிரதேசத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவராவார். இவர் தற்போது மிஹிந்தலை ருவங்கம பிரதேசத்தில் வசித்து வருகிறார்.

அநுராதபுரம்-கண்டி வீதியைச் சேர்ந்த போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான 23 வயதுடைய ஒருவரை சந்தேகத்தில் கைது செய்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்தே கான்ஸ்டபிளைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

---

# சுகாதார பரிசோதகர் சங்கத்தின் பொருளாளர் சுட்டு படுகொலை!

கொழும்பு, பெப். 27

எல்பிட்டிய, பத்திராஜவத்தை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளாளர் பதவியை வகித்த ரொஷான் குமார (வயது-51) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

எல்பிட்டிய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

---

# தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டம் குறித்து கட்சிகளுக்கு தெரிவிக்க ஆணைக்குழு தீர்மானம்

கொழும்பு, பெப். 27

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டம் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கு அறிவிக்க தேசிய தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை எதிர்வரும் 27 மற்றும் மார்ச் 06 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டத்தின்படி, தேர்தலுக்கு செலவிடப்படும் பணம் மட்டுப்படுத்தப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், இந்த சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இதுவரை ஒரு தேர்தலும் நடத்தப்படவில்லை.

அதன் காரணமாக குறித்த சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பில் அரசியல்வாதிகளுக்கு உரிய புரிதலை ஏற்படுத்தும் நோக்கில் இந்த கூட்டம் நடத்தப்படவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

(அ)

---

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் திருவள்ளுவர் குருபூஜை நிகழ்வு






யாழ்ப்பாணம், பெப். 27

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் திருவள்ளுவர் குருபூசை தினம் கடந்த 6ஆம் திகதி திங்கட்கிழமை அனுட்டிக்கப்பட்டது.

கலாசாலையின் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலாசாலையின் முன்றிலில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் மலர் வணக்கமும் செலுத்தப்பட்டது. விரிவுரையாளர்களும் ஆசிரிய மாணவர்களும் மலர் வழிபாடு மேற்கொண்டனர்.

திருவள்ளுவர் குறித்தும் திருக்குறள் குறித்தும் ஆசிரிய மாணவர்களின் சிற்றுரைகள் இடம்பெற்றன. உரைகளை ஆற்றிய ஆசிரிய மாணவர்களுக்கு புத்தக பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. இப்பரிசில்களை கலாசாலையின் மூத்த விரிவுரையாளர் மு.ஜெயக்குமாரி வழங்கினார்.

திருவள்ளுவர் குருபூசை மாசி மாத உத்திர நட்சத்திர நாளில் அனுஷ்டிக்கப்படுவது வழக்கமாகும். திருவள்ளுவர் வைகாசி மாத அனுஷ நட்சத்திரத்தில் பிறந்து மாசி மாத உத்தர நட்சத்திரத்தில் பூரணமடைந்தார் என்பது தமிழ் அறிஞர்களின் நம்பிக்கையாகும். திரு வி.க., தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர் போன்றோர் இக்கருத்தை வழிமொழிந்துள்ளனர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் செயற்பாடுகள் திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்துப் பாடலுடன் தினமும் ஆரம்பிக்கப்படுவது பன்னெடுங்காலமாக வழக்கமாக உள்ளது.

(அ)

# திருடர்களை பாதுகாப்பவர்களுடன் ஒருபோதும் இணையப்போவதில்லை

## சஜித் பிரேமதாச திட்டவட்டம்

கொழும்பு, பெப். 27

**ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றிகரமான அரசியல் பயணத்தை தடுப்பதற்காக அரசியல் நயவஞ்சகர்கள் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**




கடவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இதேவேளை, நேற்று முன்தினம் கண்டிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் தலதா மாளிகையில் வழிபாடுகளை மேற்கொண்டதன் பின்னர் மல்வத்து மற்றும் அஸ்கிரி பீட மகா நாயக்க தேரர்களையும் சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

இதன்போது, கருத்து வெளியிட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நாட்டின் சொத்துக்களை திருடிய திருடர்களுடன் தாம் ஒருபோதும் இணைந்து செயல்படப் போவதில்லை என குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தாம் இணையபோவதில்லை எனவும், முன்னதாக அவரது கோரிக்கையை ஏற்று இணைந்திருந்தால் கெஹலிய ரம்புக்வெல போன்றவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

220 இலட்சம் குடிமக்களுக்கும் பொறுப்புக்கூறக் கூடிய சரியான திசையில் பயணிக்கும், வெளிப்படைத்தன்மையுடன் செயல்படும் அரசாங்கத்தை தாம் அமைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

முடியாட்சி தருவதாக கூறினாலும் ராஜபக்ஷக்களின் வாயில் காப்பாளராக செயற்படுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியினர் தயாரில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறினார். (அ)

# மத்திய வங்கி அதிகாரிகளை விசாரணைக்கு அழைக்க கோருகிறார் ஷெஹான் சேமசிங்க



கொழும்பு, பெப். 27

சம்பள அதிகரிப்பு தொடர்பான அண்மைய சர்ச்சைகள் குறித்து இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளை பொது நிதி பற்றிய பாராளுமன்றக் குழுவின் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பரிந்துரைத்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் தமது எக்ஸ் தளத்தில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கி தமது ஊழியர்களின் வேதனத்தை 70 சதவீதம் அதிகரித்துள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியானதுடன், இந்த நடவடிக்கை ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கடுமையாக விமர்சனத்துக்கு உள்ளானது.

இந்நிலையில், மத்திய வங்கியின் ஊழியர்களின் அண்மைய வேதனத் திருத்தத்தின் பின்னணியில் உள்ள செயல்முறை மற்றும் நியாயம் குறித்து, பொருத்தமான பாராளுமன்றக் குழுவின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிப்பதற்கு வாய்ப்பை வழங்குமாறு மத்திய வங்கியின் ஆளுநர், ஜனாதிபதியிடம் எழுத்து மூலக் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக எலிசபெத் கத்ரின் ஹோர்ஸ்ட் நியமனம்!



கொழும்பு, பெப். 27

இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவராக எலிசபெத் கத்ரின் ஹோர்ஸ்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக பணியாற்றிய ஜூலி சங்கின் பதவிக் காலம் விரைவில் நிறைவடையவுள்ள நிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி சிரேஷ்ட அமெரிக்க ராஜதந்திரியான எலிசபெத் கத்ரின் ஹோர்ஸ்ட், பாகிஸ்தானுக்கு பொறுப்பான தலைமை பிரதிச் செயலாளராக பதவி வகித்து வரும் நிலையிலேயே இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் அமெரிக்க செனட் சபையின் அனுமதிக்கிணங்க இலங்கை அரசாங்கம் இதற்கான ஒப்புதல் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# குருநாகல் போதனா வைத்தியசாலையில் திடீர் மரணங்கள் வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்படும் நோயாளர்கள்!

கொழும்பு, பெப். 27

குருநாகல் போதனா வைத்தியசாலையின் டயாலிசிஸ் எனப்படும் கூழ்மப்பிரிப்பு சிகிச்சைப் பிரிவில் நோயாளர்கள் சிலர் திடீரென மரணமடைந்ததை அடுத்து, ஏனைய நோயாளர்களை வேறு பல வைத்தியசாலைகளுக்கு மாற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குளியாப்பிட்டிய, நிக்கவெரட்டிய மற்றும் தம்பதெனிய வைத்தியசாலைகளில் உள்ள கூழ்மப் பிரிப்பு சிகிச்சைப் பிரிவுகளுக்கு குறித்த நோயாளர்கள் பரிந்துரைக்கப்பட்டதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.



குருணாகல் போதனா வைத்தியசாலையில் ஒரு வாரத்திற்குள் 5 நோயாளர்கள் உயிரிழந்ததையடுத்து கூழ்மப்பிரிப்பு சிகிச்சை பிரிவை தற்காலிகமாக மூடுவதற்கு குருநாகல் போதனா வைத்தியசாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், சம்பவத்துடன் தொடர்புடைய சிறுநீரக கூழ்மப்பிரிப்பு மற்றும் இரத்தம் தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற இரு வைத்தியர்களைக் கொண்ட விசாரணைக் குழுவொன்றை நியமிப்பதற்கு சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால நடவடிக்கை எடுத்துள்ளார். (அ)

# நீர்கொழும்பு தேவாலயத்துக்கு முன்பாக அருட்தந்தையர்கள், மக்கள் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, பெப். 27

நீர்கொழும்பு-பிட்டிபன்ன தேவாலயத்துக்கு முன்பாக அருட்தந்தையர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து நேற்று முன்தினம் ஆர்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

பிட்டிபன்ன பகுதியிலுள்ள மீன் ஏல விற்பனை நிலைய நிர்வாகப் பிரச்சனையை முன்னிறுத்தி, கொழும்பு பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன்பாக மீனவர்கள் குழுவொன்று மேற்கொண்டுள்ள ஆர்ப்பாட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

65 வருடங்கள் பழமையான நீர்கொழும்பு - பிட்டிபன்ன மீன் ஏல விற்பனை நிலைய நிர்வாகத்தை கர்தினாலின் கீழ் கொண்டுவராமல் தங்களிடம் ஒப்படைக்குமாறு கோரி மீனவர்கள் பல தடவைகள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 19ஆம் திகதி நீர்கொழும்பு - பிட்டிபன்ன மீன் ஏல விற்பனை நிலைய பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் குழுவொன்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், செய்தியாளர் சந்திப்பொன்றையும் நடத்தி அவர்கள் தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்தினர்.

இந்தநிலையில் குறித்த மீனவர்களின் போராட்டத்திற்கு எதிராக நீர்கொழும்பு பிரதேசத்தில் உள்ள பல தேவாலயங்களில் நேற்று முன் தினம் கறுப்புக்கொடி ஏற்றப்பட்டு மணிகள் ஒலிக்கவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# பத்து மாணவர்கள் வைத்தியசாலையில்

கொழும்பு, பெப். 27

திடீர் சுகயீனமுற்ற நிலையில் 10 மாணவர்கள் அக்கரகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக படல்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

கொடிகமுவ பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறு திடீர் சுகயீனமடைந்துள்ளனர்.

இவர்கள் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் உள்ள நீர் வடிகால் ஒன்றை சுத்தம் செய்து கொண்டிருக்கும்போது உடல் முழுவதும் அரிப்பு ஏற்பட்டு திடீரென சுகயீனமடைந்ததாக பாடசாலை ஆசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

முதலில் 5 மாணவர்களும் 2 மாணவிகளுமே இவ்வாறு சுகயீனமடைந்து வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாகவும் பின்னர் மேலும் சில மாணவ, மாணவிகளுக்கும் இந்த அரிப்பு ஏற்பட்டதால் அவர்களும் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

ஊழியர்களின் வேதன அதிகரிப்பு;

# தெளிவுபடுத்துவதற்கு சந்தர்ப்பம் கோருகிறார் மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, பெப். 27

இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்த சந்தர்ப்பம் வழங்குமாறு நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் மத்திய வங்கியின் ஆளுநர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநர் இது குறித்து எழுத்துமூல அறிவித்தலை வழங்கியுள்ளதாக மத்திய வங்கி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வாறான தெளிவுபடுத்தலுக்கான சந்தர்ப்பம் கிடைத்த பின்னர் உரிய பாராளுமன்றக் குழுவின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு மத்திய வங்கி தயாராக இருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்கள் சபையின் அங்கீகாரத்துடன் தொழிற்சங்கங்களுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டின் பிரகாரமே இந்த வேதன அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய வங்கி அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

எனவே, மத்திய வங்கி ஊழியர்களின் அண்மைய வேதனத் திருத்தத்தின் பின்னணியில் உள்ள செயல்முறை மற்றும் நியாயம் குறித்து, பொருத்தமான பாராளுமன்றக் குழுவின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிப்பதற்கு வாய்ப்பை வழங்குமாறு கோரி மத்திய வங்கி ஆளுநர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய வங்கி தமது ஊழியர்களின் சம்பளத்தை 70 சதவீதம் அதிகரித்துள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்ததுடன், இந்த நடவடிக்கை ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கடுமையாக விமர்சனத்துக்கு உள்ளான இந்த நிலையிலேயே குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# நேற்றுடன் நிறைவடைந்த தேசிய சாரணர் ஜம்போரி




திருமலை, பெப். 27

**இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் பத்தாவது தேசிய சாரணர் ஜம்போரி திருகோணமலையில் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று திங்கள் கிழமையுடன் முவடைந்துள்ளது.**

**பிரதம சாரண ஆணையாளர் ஜனப்ரீத் பெனாண்டோ தலைமையில் நடைபெற்ற இச் சாரணர் தேசிய ஜம்போயில் இலங்கை நாட்டின் முதன்மைச் சாரணர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.**

தொடர்ச்சியாக ஏழு நாட்கள் நடைபெற்ற தேசிய சாரணர் ஜம்போரியில் பனிரெண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண், பெண் சாரணர்கள் கலந்து கொண்டனர்.

ஆசிய மற்றும் சர்வதேச நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான சாரணர்களும். சாரணியத் தலைவர்களும் பங்கு பெற்றிருந்ததோடு இலங்கையின் பல மாவட்டங்களிலிருந்தும் சாரணர்கள்,பெண் சாரணர்கள், திரி சாரணர்கள், குருளைச் சாரணர்கள், கடல் சாரணர்கள் என எல்லா வகையான சாரணர்களும் கலந்து கொண்டு ஒற்றுமையாக தங்களது சாரணர் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய சாரணர் ஜம்போரி வரிசையில் ஒன்பதாவது தேசிய சாரணர் ஜம்போரி 2016ஆம் ஆண்டு வடமாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று இருந்தது. முதலாவது தேசிய சாரணர் ஜம்போரி 1952 ஆம் ஆண்டு கொழும்பிலும் இதே போன்று 1962 ஆம் ஆண்டு இரண்டாவது தேசிய சாரணர் கொழும்பிலும் நடைபெற்றன. மூன்றாவது தேசிய சாரணர் ஜம்போரி அனுராதபுரத்தில் 1983 ஆம் ஆண்டு நடைபெற்றது.

நான்காவது தேசிய சாரணர் ஜம்போரி குருநாகலில் 1992 ஆம் ஆண்டும் ஐந்தாவது தேசிய சாரணர் ஜம்போரி 1998 ஆம் ஆண்டு கண்டியிலும் ஆறாவது தேசிய சாரணர் ஜம்போரி 2022 ஆம் ஆண்டு பலப்பிட்டிலும் நடைபெற்றன.

அத்துடன் ஏழாவது தேசிய சாரணர் ஜம்போரி நுவரலியாவில் 2006 ஆம் ஆண்டும், எட்டாவது தேசிய சாரணர் ஜம்போரி 2010 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை அங்குன கொலபெலஸவிலும் நடைபெற்றன.

(அ)



## நிந்தவூர் கடற்கரையில் சிரமதானம்

அம்பாறை, பெப். 27

நிந்தவூர்,சம்மாந்துறை மற்றும் கல்முனை நகர் லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்திருந்த கடற்கரையோர சிரமதான நிகழ்வு நிந்தவூர் கடற்கரை பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விளையாட்டுக் கழகங்கள், பொது நலன்புரி அமைப்புகள், தன்னார்வு தொண்டர்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்டோருக்கு மரக் கன்றுகளும் வழங்கப்பட்டன. (அ)

## ரயிலில் மோதுண்டு ஒருவர் பலி

மட்டக்களப்பு, பெப். 27

கொழும்பு கோட்டையிலிருந்து நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.05 மணிக்கு மட்டக்களப்பு நோக்கி புறப்பட்ட புலதுசி கடுகதி ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் இரவு 10.20 மணியளவில் மட்டக்களப்பு திராய்மடு பிரதேசத்தை அண்மித்த பகுதியில் நடந்த இந்த விபத்தில் கருவப்பங்கேணி, சிவ நாகதம்பிரான் வீதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஆண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இவரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து சம்பந்தமாக மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)



## இரு நூல்கள் வெளியீடு

அம்பாறை, பெப். 27

அக்கரைப்பற்று பன்னூலாசிரியர் எம். ஐ. மதினா உம்மாவின் 16ஆம் 17 ஆம் நூல்களான கவிதை தொகுப்புகள் அடங்கிய “வாழ்வை நிகர்த்த வானவில்”மற்றும் “கலை” ஆகிய இரு நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஏ.முகைதீன் பாவா தலைமையில் நடைபெற்ற இவ்நூல் வெளியீட்டு விழாவுக்கு ஆய்வாளர் சிராஜ் மக்க்ஷூர் பிரதம அதிதியாகவும், பிரதேச செயலாளர்களான அல்ஹாபீல் எம். எஸ். எம். றஸ்ஸான் மற்றும் ஏ.சி. ஏ அப்கர் ஆகியோர் கௌரவ அதிதிகளாவும், பிறை எப்.எம் கட்டுப்பாட்டாளர் பஷீர் அப்துல் ஹையூம், எழுத்தாளர் அக்கரையூர் அப்துல் குத்தூஸ் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் நூல் நயவுரையை அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனையின் பிரதி கல்விப் பணிப்பாளர் அ. ஸ. அஹமட் கியாஸ் நிகழ்த்தினார்.

இதேவேளை நூலின் முதல் பிரதிநிதியினை நூல் ஆசிரியரினால் யூ. எல். அஹமட் மஸாஹிருக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன் நூல் ஆசிரியருக்கு அக்கரையூர் அப்துல் குத்தூஸ் தம்பதியினரால் பொன்னாடை போத்தி நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டது. (அ)

## வெள்ளத்தினால் சேதமடைந்த வயல் வீதிகளை செப்பனிட்டு தருமாறு விவசாயிகள் கோரிக்கை

அம்பாறை, பெப். 27

சம்மாந்துறை மற்றும் நிந்தவூர் விவசாய விரிவாக்கல் பிரிவிற்குட்பட்ட வயல் வீதிகள் அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் பெரும் போக அறுவடை நடைபெறும் காலமாகையால் வீட்டு இடிபாடுகளைக் கொண்டு விவசாயிகள் வீதியை தற்காலிகமாக செப்பனிட்டு அறுவடை இயந்திரம் மற்றும் உழவு இயந்திரங்களை தமது வயல்களுக்குள் கொண்டு செல்வதற்காக பயன்படுத்தி வருகின்றனர்.



மாவடிப்பள்ளி பாலத்துக்கு அருகிலிருந்து ஆற்று ஓரமாக செல்லும் வீதி முற்றாக சேதமடைந்துள்ளதால் விவசாயிகள் வயல்களினூடாகவே பயணிக்க வேண்டியுள்ளது.

இருந்தும் சேதமடைந்த வயல் வீதிகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிறுபோக வேளாண்மைச் செய்கை ஆரம்பிப்பதற்கு முன் செப்பனிட்டு தர வேண்டுமென விவசாயிகள் கேட்டுள்ளனர்.

(அ)

## மட்டக்களப்பில் இரத்த தான முகாம்

மட்டக்களப்பு, பெப். 27

ரிதம் சனசமூக நிலையம் மற்றும் ரிதம் இளைஞர் கழகம் என்பவற்றின் ஏற்பாட்டில் ரிதத்தின் 20 ஆண்டு நிறைவையொட்டி ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இரத்ததான முகாம் ரிதம் சனசமூக நிலைய கட்டடத்தில் இடம்பெற்றது.

ரிதம் சனசமூக நிலையத்தின் தலைவர் கே.ஈ.கருணாகரன் மற்றும் ரிதம் இளைஞர் கழகத் தலைவர் எஸ்.சஜிந் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற மேற்படி இரத்த தான முகாமிற்கு ஆனைப்பந்தி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம் மற்றும் ரிதம்



சனசமூக நிலையம் என்பன அனுசரணை வழங்கியிருந்தன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மேற்படி இரத்ததான முகாமில் வைத்தியர்கள், தாதி உத்தியோஸ்தர்களும், ரிதம் குழுவினரும், குருதிக் கொடையாளிகளும் கலந்து கொண்டிருந்தனர். அ)

# இதுவரை 31,000 வீரர்களை நாங்கள் இழந்து விட்டோம்

## எமது திட்டங்கள் முன்கூட்டியே ரஷ்யாவுக்கு கிடைத்து விடுகிறது என்கிறார் ஜெலன்ஸ்கி

கீவ், பெப். 27

**இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பு தொடங்கியதில் இருந்து 31,000 உக்ரைனிய வீரர்கள் கொல்லப்பட்டதாக ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.**



கடந்த ஒரு வருடத்திற்கும் அதிகமான காலத்தில், உக்ரைன் தரப்பு அதிகாரபூர்வமாக உயிரிழப்பு விவரத்தை அறிவிக்கமலிருந்த நிலையில், ஜெலன்ஸ்கியின் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

செய்தியாளர் மாநாட்டில் பேசிய ஜெலன்ஸ்கி, காயமடைந்தவர்களின் எண்ணிக்கையை வெளியிட முடியாது, ஏனெனில் இது ரஷ்ய இராணுவ திட்டமிடலுக்கு உதவும்-என்றார்.

“இந்தப் போரில் 31,000 உக்ரைன் துருப்புக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 300,000 அல்ல, 150,000 அல்ல. ஆனாலும், இது எங்களுக்கு ஒரு பெரிய இழப்பு“ என்றார் அவர்.

2022 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து உக்ரைன் தனது இராணுவ இழப்புகளின் எண்ணிக்கையை வெளியிடவில்லை. பெப்ரவரி 24 அன்று படையெடுப்பிலிருந்து 13,000 உக்ரேனிய வீரர்கள் கொல்லப்பட்டதாக ஜனாதிபதி உதவியாளர் மைக்கைலோ பொடோலியாக் கூறினார்.

ரஷ்யா இராணுவ இழப்புகளை வெளியிடவில்லை. அது இரகசியமாக கருதுகிறது.

ஜெலன்ஸ்கி மேலும் தனது நாட்டின் வெற்றி மேற்கத்தேய ஆதரவை சார்ந்துள்ளது என்றும், அமெரிக்கா ஒரு முக்கியமான இராணுவ உதவிப் பொதியை அங்கீகரிக்கும் என்றும் கூறினார்.


உக்ரைனிய தலைவரின் கருத்துக்கள் வெடிமருந்துகள் பற்றாக்குறை மற்றும் காங்கிரசில் அமெரிக்க உதவியை தடுப்பதால் உக்ரைன் பலவீனமடைந்திருக்கும் நேரத்தில் வந்துள்ளது.

புடினுடன் பேசுவீர்களா என்று கேட்டதற்கு, “உங்களால் காது கேளாத நபரிடம் பேச முடியுமா? எதிரிகளைக் கொல்லும் மனிதனிடம் பேச முடியுமா?” என ஜெலென்ஸ்கி கூறினார்.

கடந்த ஆண்டு உக்ரைன் நீண்ட காலமாக எதிர்பார்த்த எதிர்த் தாக்குதலுக்கான திட்டங்கள் ரஷ்யாவுக்கு முன்னதாகவே கசிந்துவிட்டன என்றும் ஜெலன்ஸ்கி கூறினார்.

“எதிர் தாக்குதல் நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்பே எங்கள் எதிர் தாக்குதல் செயல் திட்டங்கள் கிரெம்ளின் அட்டவணையில் இருந்தன” என்று ஜெலென்ஸ்கி கூறினார்.

(அ)




# வைத்தியர்களின் போராட்டத்தை நிறுத்த தென்கொரியா காலக்கெடு!

சியோல், பெப். 27

போராட்டத்தை கைவிட்டு பெப்ரவரி மாத முடிவிற்குள் பணிக்கு திரும்புமாறு தென்கொரிய அரசாங்கம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளம் வைத்தியர்களுக்குத் தெரிவித்துள்ளது.

போராட்டத்தை முடிவுக் கொண்டுவருவதற்கு அவர்களுக்கு காலக்கெடு கொடுக்கப்பட்ட நிலையில், அதனை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வைத்தியர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுத்து அவர்களின் அனுமதிப் பத்திரத்தினை ரத்து செய்யும் நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் வைத்தியர்கள் எதனையும் பொருப்படுத்தாது போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

வைத்தியர்களின் போராட்டம் காரணமாக நோயாளிகள் சிரமங்களுக்கு உள்ளாகிவருகின்றனர்.

அவசர பிரிவினைத் தவிர ஏனைய பிரிவுகள் அனைத்தும் முடங்கிப் போயுள்ளன.

தென்கொரிய அரசாங்கம், வைத்தியத் துறையினை விரிவாக்கும் பொருட்டு, வைத்திய மாணவர்களின் அனுமதியினை அதிகரிக்க திட்டம் கொண்டிருந்த நிலையில் அதற்கு எதிராக இளம் வைத்தியர்கள் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# நேட்டோ அணியில் இணையும் சுவீடன்

## ஹங்கேரியின் ஒப்புதலுக்கு காத்திருப்பு



ஸ்ரொக்ஹோம், பெப். 27

நேட்டோ அணியில் சுவீடன் இணைவதற்கான ஒப்புதலை ஹங்கேரி வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நீண்ட காலத்திற்குப் பின்னர் கூட்டமைப்பின் நாடுகளின் கொள்கையில் மாற்றங்கள் ஏற்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை சுவீடன் பிரதமர் உல்ப் கிறிஸ்டர்சன் ஹங்கேரிக்கு விஜயம் செய்திருந்த நிலையில் புதிய பாதுகாப்பு உடன்படிக்கையில் கையொப்பம் இட்டிருந்தார்.

இந்த நிலையில் ஹங்கேரி பாராளுமன்றத்தில் சுமூகமான வாக்கெடுப்பின் மூலம் ஒப்புதல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ரஷ்யா 2022 ஆம் ஆண்டு உக்ரைன் மீது வலிந்து போர் தொடுத்திருந்த நிலையில் சுவீடன் தனது தேசிய பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு அணிசேரா கொள்கையில் மாற்றங்களை கொண்டுவந்துள்ளது.

கடந்த வருடம் பின்லாந்தினையடுத்து சுவீடன், நேட்டோ அணியில் 32 ஆவது நாடாக இணையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

துருக்கி மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிலையில் சுவீடன் நேட்டோவில் இணைந்து கொள்வதற்கு காத்திருந்தது.

சுவீடன் தனது ஆயுத விற்பனை குறித்தான சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டுவந்து துருக்கியினை சமாதானப்படுத்தியிருந்த நிலையில், ஹங்கேரியின் ஒப்புதலை எதிர்பார்த்துள்ளது.

(அ)

# பிலிப்பைன்ஸின் கப்பலை தடுக்க முயன்ற சீன கப்பல்

மணிலா, பெப். 27

மீனவர்களுக்கு பொருட்களை எடுத்துச் சென்ற தமது நாட்டு கப்பலை சீனாவின் கடலோர பாதுகாப்பு படையினர் தடுக்க முயற்சித்தது என பிலிபைன்ஸ் அஅரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த சம்பவமானது தென் சீனக்கடலில் சர்சைக்குரிய பகுதியில் இரண்டு வாரங்களில் நடந்துள்ள இரண்டாவது சம்பவமாகும்.

கடந்த 22 ஆம் திகதி மீனவர்களுக்கு எரிபொருளை விநியோகம் செய்துகொண்டிருந்த பிலிப்பைன்ஸ் கப்பலை, சீனக் கடலோர பாதுகாப்பு படையின் கப்பல் மற்றும் மூன்று சீனக் கப்பல்கள் இடையூறுகள் செய்ததாக பிலிப்பைன்ஸ் கடலோர பாதுகாப்பு படையினர் கூறியுள்ளனர்.

நான்கு சீனக் கப்பல்களில் மூன்று கப்பல்கள், பிலிப்பைன்ஸ் கப்பலுக்கு 100 மீற்றர் சுற்றுவட்டாரத்துக்குள் வந்து, ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் அவை நகர்ந்து சென்றதாக பிலிப்பைன்ஸ் தெரிவித்துள்ளது.

கடந்த வாரமும் இப்படியான சம்பவம் நடந்தது- பிலிப்பைன்ஸ் அரசாங்கம்

எனினும் தமது கப்பலின் தலைமை மாலுமி திறமையாக செயற்பட்டதால், ஆபத்தை தவிர்க்க முடிந்ததாக தென் சீனக் கடல் விவகாரங்களுக்கான பிலிப்பைன்ஸ் கடலோர பாதுகாப்பு படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் இதே கடல்ப் பகுதியில் இப்படியான மோதல் சம்பவம் ஒன்றை எதிர்நோக்கியதாக பிலிப்பைன்ஸ் அரசாங்கம் கூறியுள்ளது.

பிலிப்பைன்ஸுக்கு அருகில் அமைந்துள்ள ஸ்கார்பருக் ஷோல் என்ற தீவை சீனா கடந்த 2012 ஆம் ஆண்டு கைப்பற்றியதில் இருந்து இரு நாடுகளுக்கு இடையில் மோதல்கள் நிலவி வருகின்றன.

2012 ஆம் ஆண்டு முதல் சீனா தனது கடல் பாதுகாப்பு ரோந்து படகுகளை அந்த தீவுக்கு அருகில் நிறுத்தி வைத்துள்ளது.

(அ)

# இராஜினாமா செய்த பலஸ்தீனப் பிரதமர்!

## ஜனாதிபதி அப்பாஸ் மீதும் அமெரிக்க கடும் அழுத்தம்

ரமல்லா, பெப். 27

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் அதிகரித்து வரும் வன்முறைகள் மற்றும் காசா மீதான போரின் காரணமாக, ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் சில பகுதிகளை ஆளும் தனது அரசாங்கம் இராஜினாமா செய்வதாக பலஸ்தீனப் பிரதமர் மொஹமட் ஷ்டய்யே அறிவித்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தினை திங்களன்று அவர் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸிடம் கையளித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்குக் கரை மற்றும் ஜெருசலேமில் முன்னெப்போதும் இல்லாத வகையில் வன்முறை தீவிரம் மற்றும் காசா பகுதியில் போர், இனப்படுகொலை மற்றும் பட்டினி ஆகியவற்றின் பின்னணியில் மொஹம்ஷ்டய்யே இந்த முடிவினை எடுத்துள்ளார்.

ஆளும் கட்சியான ஃபதாவின் மத்தியக் குழு உறுப்பினரான ஷ்டய்யே 2019 முதல் பலஸ்தீனப் பிரதமராக இருந்து வருகிறார்.

அவருக்குப் பதிலாக முன்னாள் துணைப் பிரதமரும், பலஸ்தீனிய முதலீட்டு நிதியத்தின் தலைவருமான பொருளாதார நிபுணருமான மொஹமட் முஸ்தபா நியமிக்கப்படலாம் என ஆரம்ப கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காசாவில் மோதலை நிறுத்த சர்வதேச முயற்சிகள் தீவிரமடைந்துள்ளது.

போருக்குப் பின்னர் அந்த பகுதியை ஆளுவதற்கான அரசியல் கட்டமைப்பை உருவாக்கும் பணியைத் தொடங்கும் நிலையில், பலஸ்தீன அதிகாரத்தை அசைக்க ஜனாதிபதி அப்பாஸ் மீது அமெரிக்க அழுத்தம் அதிகரித்து வரும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# பயிற்சி பெற்ற மருத்துவரின் தலையீடில்லாமல் பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை உயிருக்கு ஆபத்து!

## வைத்திய நிபுணர்களின் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 27

**பயிற்சி பெற்ற மருத்துவரின் தலையீடு இல்லாமல் பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை செய்வது உயிருக்கு கூட ஆபத்தாகிவிடும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை வைத்திய நிபுணர்களின் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

தகுதிகள் அற்ற பல வைத்தியர்கள் இத்துறையில் பணியாற்றி வருவதாக நேற்று முன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டது.

தகுதியற்ற மருத்துவர்களால் மேற்கொள்ளப்படும் பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சை ஆபத்துகள் குறித்து பொதுமக்களுக்கு தெளிவுப்படுத்துவதற்காக சங்கத்தின் வைத்திய நிபுணர் குழுவொன்று நேற்று முன் தினம் செய்தியாளர் சந்திப்பை நடத்தியது.

இதேவேளை, அண்மையில் கண்டியில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் வயிற்றில் படிந்திருந்த 13.5 லீற்றர் கொழுப்பை அகற்றும் சத்திர சிகிச்சை உயிருக்கு ஆபத்தான சத்திர சிகிச்சை எனவும் வைத்தியர்கள் இதன்போது வெளிப்படுத்தினர்.

அங்கு உரையாற்றிய சங்கத்தின் வைத்திய நிபுணர் கலாநிதி அமில ஷசங்க ரத்நாயக்க,

“கண்டியில் உள்ள தனியார் மருத்துவமனையில் உலக சாதனை நிகழ்த்தப்பட்டதாக செய்தி ஒன்று வந்தது. அந்தச் செய்தியில் குறிப்பிட்ட அறுவை சிகிச்சை நிபுணர் ஒருவர் 62 வயது மூதாட்டியின் வயிற்றில் இருந்த 13.5 லீற்றர் கொழுப்பை அகற்றியிருந்தார். இந்த மாதிரி அறுவைச் சிகிச்சையில் 8 லீற்றருக்கு மேல் அகற்றப்படமாட்டாது. காரணம் அது உயிருக்கு ஆபத்தானது. அது இவ்வாறு குறைக்கப்படும் அறுவை சிகிச்சை அல்ல. அது உடல் வடிவத்தை மீண்டும் பெறும் சிகிச்சையாகும். குறித்த அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அந்த நோயாளியின் நிலைமை மிகவும் மோசமாகி மீண்டும் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது-என்றார்.

(அ)

# ரணிலை சந்தித்தார் சந்திரகுமார்



கொழும்பு, பெப். 27

ஜனாபதி ரணில் விக்கிரமசிங்கவை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்,

சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரமான மு.சந்திரகுமார் மற்றும் சமத்துவக் கட்சியின் தலைவர் சு. மனோகரன் ஆகியோர் நேற்று முன் தினம் கொழும்பில்சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று முன் தினம் காலை இடம்பெற்ற இச் சந்திப்பின் போது கிளிநொச்சி மாவட்டம் உட்பட வடக்கின் தற்போதைய அரசியல் பொருளாதார நிலைமைகள், பிரதேச அபிவிருத்தி பற்றி பேசப்பட்டதோடு, எதிர் கால அரசியல் செயற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

(அ)

# உயர்தர மாணவர்களுக்கான தொழில் பயிற்சித் திட்டங்கள்!

கொழும்பு, பெப். 27

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு ஆங்கில மொழி வழிகாட்டல் மற்றும் அவர்கள் விரும்பும் தொழிற் பயிற்சியை மார்ச் 5ஆம் திகதி முதல் இலவசமாகக் கற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் 300 நிலையங்களைப் பயன்படுத்தி இந்தப் பயிற்சித் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், இவ்வருட சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கும் இது போன்ற பயிற்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

மேலும் அனைத்து ஆசிரியர்களும் தகவல் தொழிநுட்ப அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என வலியுறுத்திய அமைச்சர்,



ஒவ்வொரு பிரதேசத்திலும் நிறுவப்பட்டுள்ள கணினி வள நிலையங்கள் மூலம் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் பாரிய வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள கணினி வள நிலையங்களின் எண்ணிக்கை 100 எனவும், எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கையை அதிகரிக்க ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(அ)

# ஏற்றுமதியை இலக்காக கொண்டு 2 ஆவது இளநீர் செய்கை கிராமம்

கொழும்பு, பெப். 27

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு, இரண்டாவது இளநீர் செய்கை கிராமம் முருதவெல ரலுவ கிராமத்திற்கு அருகாமையில் நிறுவப்பட்டுள்ளது.

விவசாய மற்றும் பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் நேற்று முன் தினம் இந்த வேலைத்திட்டம் இடம்பெற்றது.

ஏற்றுமதிக்கு இளநீர் பயிரிடும் முதல் கிராமம் கடந்த ஆண்டு கீழ் முருதவெலியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இவ்விரு கிராமங்களிலும் 10,000 இளநீர் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இலங்கையின் இளநீருக்கு அதிக கேள்வி காணப்படுவதாகவும், மேலும் பல நாடுகளில் இருந்து எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இளநீருக்கு அதிக கேள்வி இருப்பதாகவும் விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

வாரத்திற்கு சுமார் 252,000 இளநீர்கள் நாட்டிலிருந்து ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டில் இளநீர் ஏற்றுமதி மூலம் இரண்டு பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், கடந்த வருடம் எதிர்பார்த்த வருமானம் ஆறு பில்லியன் ரூபாவாகும்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இளநீர் ஒன்றின் விலை இலங்கை ரூபாவின் பெறுமதிக்கு அமைய 2000 ஆக விற்பனை செய்யப்படுகிறது.

இளநீர் இலங்கையின் பூர்வீகப் பயிராகும், பல நாடுகள் இளநீர் பயிரிட முயன்றாலும், இலங்கையில் இளநீர் போன்று அதிக சுவை இல்லாததால் அந்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

இதன் காரணமாக, உள்நாட்டு இளநீருக்கு உலகச் சந்தையில் இலங்கையின் ஏகபோக உரிமை இன்னும் உள்ளது.

இந்த சூழ்நிலையில் இருந்து அதிகபட்ச இளநீரை அறுவடை செய்வதற்காக, குறிப்பாக முருதவெல பிரதேசத்தில் உள்ள பல கிராமங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, இரண்டாவது இளநீர் செய்கை மாதிரி கிராமமாக ரலுவ கிராமம் நிறுவப்பட்டுள்ளதுடன் அங்குள்ள விவசாயிகளுக்கு 1,600 இளநீர் கன்றுகளை விவசாய அமைச்சர் வழங்கினார்.

(அ)

# இலங்கையிலிருந்து கடத்திச் செல்லப்பட்டு கடலில் வீசப்பட்ட தங்கத்தை தேடும் பணி

கொழும்பு, பெப். 27

இலங்கையிலிருந்து கடத்திச் செல்லப்பட்டு கடலில் வீசப்பட்ட தங்கக் கட்டிகளை தேடும் பணி ஐந்தாவது நாளாக தொடர்கின்றது.


தமிழகத்தில், ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அடுத்துள்ள வேதாளை சிங்கி வலைகுச்சி கடல் பகுதியில் கடத்தல் தங்க கட்டிகளை நேற்று திங்கட்கிழமை ஐந்தாவது நாளாக தேடினர்.

இந்திய மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தீவிரமாக தேடி வந்த நிலையில் தங்கம் கிடைக்கவில்லை.

இந்நிலையில், வட மாநிலத்தில் இருந்து கடலுக்கு அடியில் பொருட்களை தேடும் ஸ்கானர் கருவி வரவழைக்கப்பட்டு அதன் உதவியுடன் நேற்று ஐந்தாவது நாளாக கூபா வீரர்களை கொண்டு கடலுக்கு அடியில் தங்கக் கட்டிகளை தேடும் பணி தொடர்ந்து இடம்பெற்றது.

(அ)

# அரிசி ஏற்றிச் சென்ற வாகனம் நடு வீதியில் கவிழ்ந்து விபத்து!



கொழும்பு, பெப். 27

கொழும்பு - கண்டி நெடுஞ் சாலையில் தங்கோவிட்ட ஹெலகலைக்கு அருகில் நேற்றுக் காலை அரிசி ஏற்றிச் சென்ற கனரக வாகனம் ஒன்று வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதன் உதவியாளர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்த வீதியின் போக்குவரத்து மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் தடைப்பட்டது.

மிதிரிகிரியவிலிருந்து களுத்துறைக்கு அரிசி ஏற்றிச் சென்ற போது காலை 6.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரின் உதவியுடன் அரிசியை வேறு வாகனத்தில் ஏற்றி அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (அ)

# போலி விஸா பயன்படுத்தி ஐரோப்பாவுக்கு செல்ல முயற்சித்த குடும்பத்தினர் கைது!

கொழும்பு, பெப். 27

போலியான கிரேக்க விஸாக்களை பயன்படுத்தி ஐரோப்பாவுக்குச் செல்ல முயன்ற நாத்தாண்டி பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகரையும் அவரது குடும்பத்தினரையும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்கவிலிருந்து பஹ்ரைன் சென்று அங்கிருந்து மற்றொரு விமானத்தில் கிரீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகருக்குச் செல்ல இவர்கள் திட்டமிட்டிருந்ததாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நான்கு பேர் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மீது சந்தேகமடைந்த குடிவரவு, குடியகல்வு புலனாய்வுப் பிரிவினர், அவர்களைக் காவலில் எடுத்து விசாரித்ததில், ஒரு கோடியே நாற்பது இலட்சம் ரூபா கொடுத்து தரகர் ஒருவரிடம் கிரேக்க போலி விஸா பெற்றிருப்பது தெரியவந்தது.

(அ)

## எமது கட்சியில்...

**கேள்வி** - பேச்சில் எவ்விடயங்கள் பற்றி பேசினீர்கள்?

**பதில்** - அரசியல் தரப்பினர் எதிர் கொண்டுள்ள பிரச்னைகள், எதிர்கா லத்தில் இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களை எதிர்க்கொள்வது உள்ளிட்ட பல விடயங்கள் பற்றி பேசினோம். கட்சியின் தேசிய அமைப் பாளர் பஸில் ராஜபக்ஷ இன்னும் இரு வாரங்களில் நாட்டுக்கு வருவார். அதன் பின்னர் அரசியல் கூட்டணி பற்றி கலந்துரையாடுவோம்.

**கேள்வி** - ரணில் விக்கிரமசிங்க, நாமல் ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ ஆகியோரில் யார் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர்?

**பதில்** - யாரை ஜனாதிபதி வேட்பா ளராக களமிறக்க வேண்டும் என்பதை கட்சியின் நிறைவேற்று சபையே தீர்மா னிக்கும். ரணில் விக்கிரமசிங்க எமது கட்சியின் உறுப்பினரல்ல, எமது கட்சி யில் போட்டியிடுவதா இல்லையா என் பதை அவர் முதலில் தீர்மானிக்க வேண்டும்.

**கேள்வி** - உங்களை போன்று நாமல் ராஜபக்ஷவும் தற்போது விகாரைகளுக்கு செல்கிறார்?

**பதில்** - தந்தை சென்ற பாதையில்தான் மகனும் செல்ல வேண்டும். அவர் பௌத் தர் ஆகவே விகாரைகளுக்கு செல்கிறார்.

**கேள்வி** - சபாநாயகருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் நம்பிக்கை யில்லா பிரேரணை கொண்டு வரவுள் ளனரே?

**பதில்** -சபாநாயகரை நாங்கள் பாது காப்போம். நம்பிக்கையில்லா பிரேர ணையை நிச்சயம் தோற்கடிப்போம் - என்றார். (ஐ)

## சிறீ லங்கன்...

தாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

இந்தியாவின் அதானி நிறுவனம் மட்டுமல்ல சீனா, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகள் விமான நிலையத்தை கையகப் படுத்தக் காத்திருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக சிறீ லங்கன் எயார்லைன்ஸ் விமானிகள் மற்றும் பொறியியலாளர்கள் மேற்கொண்ட பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நிறுவ னத்தின் இருப்பு கேள்விக்குறியாகி உள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித் துள்ளார்.

சிறீ லங்கன் விமான சேவையின் தற்போதைய நிலையில் அதனை இலவசமாக பெற்றுக்கொள்வதற்குக்கூட எந்த நிறுவனமும் முன்வராத சூழ் நிலையே காணப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## இந்தியா...

இலங்கை அரசாங்கத்துக்கும் தெரியப் படுத்தியுள்ளோம்.

ஆனால், இந்தியாவில் உள்ள சில அரசியல்வாதிகள் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டுவதை நியாயப்படுத்தும் நோக்கில் கருத்து வெளியிடுவது மனவே தனையை தருகிறது.

நாம் எமது கடலில் மீன்பிடிப்பதற்கு இந்திய அரசாங்கத்தை கேட்கவேண்டிய தேவை இல்லை. அத்தோடு எமது கடலை இந்திய மீனவர்களுக்கு தாரைவார்த்துக் கொடுக்கவும் முடியாது.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் சிலர், இலங்கைச் சிறையில் உள்ள நிலையில் அவர்களை விடுவிக்குமாறு இந்திய அரசு அழுத்தம் வழங்கி வருகிறது.

இதனை நாம் வன்மையாகக் கண்டிக் கிறோம். எமது கடல் இறைமை எமக்கே சொந்தமான கடலை யாருக்கும் தாரை வார்க்க முடியாது.

ஆகவே, இதனை வலியுறுத்தி கடலில் கறுப்புக் கொடி ஏந்திப் போராட்டம் நடத்துவதோடு எமது போராட்டம் இலங்கை கடல் எல்லை வரை தொடர வுள்ளது - என்றார். (அ)

## வழக்கை...

நிர்வாக தெரிவுகளுக்கு எதிராக கட்சியை சேர்ந்த இருவர் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

வழக்கை தொடர்ந்தவர்கள் அதை வாபஸ் பெறவில்லையென்றால், யாப்பை மீறித் தெரிவுகள் நடந்தன என்பதை ஏற் றுக் கொண்டு யாப்பின்படி தேர்தலை மீள நடத்துவதாக நீதிமன்றத்தில் அறி வித்து, புதிதாக- யாப்பு விதிகளின்படி கிளை தெரிவுகளை நடத்தி- நிர்வாக தெரிவை மேற்கொள்வதாக நீதிமன் றத்தில் அறிவிக்க தமிழ் அரசு தலைமை தீர்மானித்தது.

இந்தப் பின்னணியில் அண்மையில் கிளிநொச்சியில் கூடிய தமிழ் அரசு கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள்- வடக்கின் பிரதிவாதிகளாக பெயரிடப் பட்டவர்கள் ஒரு சட்டத்தரணி குழுவின் ஊடக வழக்கை எதிர்கொள்ளத் திட்ட மிட்டனர். இதற்கு மத்தியகுழு உறுப்பி னர்கள் ஆதரவளித்தனர்.

இந்த நிலையில், ப. சத்தியலிங்கம், சே. குலநாயகம் ஆகியோர் தமக்கான சட்டத்தரணிகளை தாமே நியமிக்கி றோம் என கட்சிக்கு அறிவித்துள்ளனர் என்று அறிய வருகின்றது.

ஏனைய பிரதிவாதிகளான மாவை சேனாதிராசா, சி.சிறீதரன், பெ. கனகச பாபதி, ச. குகதாசன் ஆகியோருக்காக திருகோணமலை நீதிமன்றத்தில் ஜனாதி பதி சட்டத்தரணிகள் கே. வி. தவராசா, புவிதரன் மற்றும் சட்டத்தரணி சிவானந் தராஜா உள்ளிட்டவர்கள் முன்னிலை யாகவுள்ளனர். யாழ்ப்பாணம் நீதிமன் றத்தில் மூத்த சட்டத்தரணி சிறீகாந்தா தலைமையிலான சட்டத்தரணிகள் முன்னிலையாவர். (ஐ)

## நாய்கடித்து...

நிலையில் 25ஆம் திகதி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவர் நீர் வெறுப்பு நோய்க்கு உள் ளாகி இருந்தாரெனத் தெரிவிக்கப்படு கிறது.

அவரது சடலம் மீதான மரண விசார ணைகளை திடீர் மரண விசாரணை அதி காரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண் டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்ப டைக்கப்பட்டது. (அ)

## பிரிட்டன்...

உப தலைவர் ஹென்றி மகேந்திரன் மற்றும் தேசிய அமைப்பாளர் குருசுவாமி சுரேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் நடைபெற்ற கலந்துரையாடலில் பிரதானமாக, நடைபெற்று வரும் மனித உரிமை பேரவையின் கூட்டம், தமிழர் களுக்கான நீதியை பெறுவதற்கான பிரித்தானியாவினுடைய பங்கு என்பன தற்கால அரசியல் விடயங்களோடு பேசப்பட்டன.

மனித உரிமை பேரவையின் அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வே ளையில் இச் சந்திப்பு மிகவும் முக்கியத் துவம் வாய்ந்தது என ரெலோ தரப்பு தெரிவித்துள்ளது. (அ)

## இணைய...

நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

இணையவழி பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டதன் ஊடாக சபா நாயகர் தன்னிச்சையாக செயற்பட் டுள்ளார்.

ஏனென்றால் சட்டமூலமொன்று சட்டமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமாயின் நியதிகளுக்கமைய பாராளுமன்றம் செயற்பட வேண்டும்.

சபாநாயகர் அதனை செய்யவில்லை. பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் அவர் சட்டமூலத்தில் கையெழுத்திட்டுள்ளார்-என்றார். (அ)

# எந்த வேட்பாளருக்கும் எங்கள் ஆதவு இல்லை

## விமல் வீரவன்ஸ அறிவிப்பு



கொழும்பு, பெப். 27

"அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்காக இதுவரை பெயரிடப்பட்டுள்ள எந்த வொரு வேட்பாளரையும் ஆதரிக்க மாட்டோம்." - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பின ருமான விமல்வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்ப தற்கான தேவைப்பாடு அரசுக்கு உள்ளது. ஆனால் அந்த முயற்சி கைகூடாது. ஆளுங்கட்சியினர் விரும்பாவிட்டாலும் தேர்தலை நடத்தியாக வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலுக்காக இதுவரை பெயரிடப்பட்டுள்ள எந்தவொரு வேட்பாளருக்கும் நாம் ஆதரவு வழங்க மாட்டோம். முற்போக்கு சக்திகளை இணைத்துக்கொண்ட கூட்டணியாகவே தேர்தலை எதிர்கொள்வோம். நாம் எமது வேட்பாளருடன்தான் தேர்தலுக்கு வருவோம்." - என்றார். (அ)

# ஒக்ரோபர் 17 இற்கு பின்னர் ஒருநாள்கூட ரணில் ஜனாதிபதியாக இருக்கமாட்டார்!

## அநுரகுமார சூளுரை



கொழும்பு, பெப். 27

எதிர்வரும் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு பின்னர் ஒரு நாள் கூட ரணில் விக்கிரம சிங்கவுக்கு இந்த நாட்டில் ஜனாதிபதி யாக செயற்படமுடியாது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற தேசிய மக் கள் சக்தியின் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமா? இல்லையா? என்பது தொடர்பில் பல கருத்துக்கள் எழுந்த வண்ணமே உள்ளன.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதிக்கு பின்னர் ஒரு நாள் கூட ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டில் ஜனாதிப தியாக பதவி வகிக்க முடியாது.

ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் அவர் தனது ஜனாதிபதி பத வியை விட்டு 5ஆவது லேனில் உள்ள தனது வீட்டில் இருப்பார் எனக் கூறுகின் றேன்.

ஏமாற்றப்பட்ட பொது மக்கள், துன் பங்களுக்கு முகம் கொடுத்துள்ள பொது மக்கள், எதிர்பார்ப்புகளை இழந்த இளைஞர்களின் எதிர்காலம், மருந்துகள் இல்லாத நோயாளர்கள் இவ்வாறான ஒரு நாடே தற்போது காணப்படுகிறது. இந்த நாட்டு மக்களை ஏமாற்ற உரிமை இல்லை.

அதனால், நாம் உங்களுக்கு உறுதிய ளிக்கிறோம். இந்த நாட்டு மக்களை மின் சார ரயிலில் ஏற்ற புதியதொரு சமுதா யத்தை ஆரம்பிக்க வேண்டும்.

பழைய இடத்திலிருந்து கேட்ட கேள்விகளை மீண்டும் எங்களிடம் கேட்க வேண்டாம் என கோரிக்கை விடுக்கிறோம்.

இது வெறுமனே தேர்தல் மட்டும் அல்ல மாற்றமடையக்கூடிய ஒரு யுகத்தின் ஆரம்பம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்-என்றார். (அ)

## எட்கா உடன்பாடு...

பாதிப்பு ஏற்படாது." - என்று வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித் தார்.

எட்கா உடன்படிக்கை மூலம் இந்திய முதலீட்டாளர்கள், இந்திய தொழில் துறை மற்றும் தொழில்நுட்பம் என்பன இலங்கைக்கு வருவதால் இலங்கை தொழிலாளர்களுக்கு ஊழியர்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் அல்லவா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக் கையிலேயே அலிசப்ரி இவ்வாறு கூறி னார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"அவ்வாறானதொரு நிலை ஏற்படாது. முதலீடுகள் வரும். முதலில் நாம் ஒரு விடயத்தை தெரிவித்துக்கொள்ள வேண்டும். உலகப் பொருளாதாரம் என்பது 86 ஆயிரம் பில்லியன்களாகும். இலங்கையின் பொருளாதாரம் என்பது 74 பில்லியன்களாக உள்ளது. கடந்த காலத்துக்கு அஞ்சி செயற்பட முடியாது. இந்தியா இன்று வேகமாக வளர்ச்சிய டைந்துள்ளது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இந்தியாவுடன் கொடுக்கல் - வாங்கல்களில் ஈடுபடுகின்றன. எனவே, இந்திய தரப்பில் இருந்து எமது நாட் டுக்கு கிடைக்கக்கூடிய பொருளாதார பங்களிப்பு பற்றியே நாம் கவனம் செலுத்த வேண்டும். போட்டி தன்மை உருவாகும். அப்போதுதான் ஏற்றுமதி பொருளாதா ரத்தை நோக்கி நகரலாம். இதற்கு முதலீட் டாளர்கள் வர வேண்டும்.

இலங்கை சந்தையை மட்டும் குறி வைத்து முதலீட்டாளர்கள் வருவதில்லை, அவர்களுக்கு பாரியதொரு சந்தை வாய்ப்பு அவசியம். இதற்கான ஏற்பாடுகளை செய்துகொடுக்க வேண்டும். அதன் நிமித்தமே வர்த்தக ஒப்பந்தங்கள் செய் யப்படவுள்ளன. ஆசியான் நாடுகள், சீனா, பங்களாதேஷ், இந்தியா ஆகிய நாடுகள் இதே வழிமுறையைத்தான் பின்பற்றின. எனவே, குறித்த உடன்படிக் கையை சிறப்பாக பயன்படுத்தினால் எமது நாட்டுக்கு நன்மை கிட்டும்." - என்றார். (அ)

## பொதுஜன...

பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோ ருக்கிடையிலான குறித்த சந்திப்பு ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் தேர்தலில் புதிய கூட்டணி அமைப்பது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கலந்துரையாடியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம் பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள் ளார். (அ)

ஈழநாடு
Eelanadu

# மின்சார கட்டணம் மேலும் குறையும்!

கொழும்பு, பெப். 27

மின்சாரக் கட்டணத்தை 20 வீதத்துக்கும் மேல் குறைக்கவேண்டும் என பாராளுமன்ற மேற்பார்வைக் குழு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

தற்போதுள்ள சூழ்நிலையின் அடிப்படையில் மின்சாரக் கட்டணத்தை 33 வீதத்தால் குறைக்க முடியும் என ஆணைக்குழுவிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் மின்சாரக் கட்டணத்தை 18 வீதத்தால் குறைக்க ஆணைக்குழுவிடம் மின்சார சபை முன்மொழிந்துள்ளது.

மின்சார சபையின் 18 வீதம் மற்றும் உண்மையில் குறைக்கக்கூடிய வீதம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, 20 வீதத்திற்கும் மேலாக கட்டணங்களைக் குறைக்க குழு பரிந்துரைத்துள்ளது.

மேலும், துண்டிக்கப்பட்ட பிறகு மீண்டும் மின் இணைப்பை ஏற்படுத்த அறவிடப்படும் 3000 ரூபாய் கட்டணத்தை 1500 ரூபாயாக குறைக்கவும் குழு ஆணைக்குழுவுக்கு பரிந்துரை செய்துள்ளது. (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியில் இணைய பேச்சு நடத்தும் சு.க. முக்கியஸ்தர்கள்

கொழும்பு, பெப். 27

**சுதந்திரக்கட்சியில் அங்கம் வகிக்கும் கொழும்பு மாவட்டத்தை சேர்ந்த இரண்டு முக்கிய அரசியல்வாதிகள், ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இவர்களில் ஒரு அரசியல்வாதி, கூட்டணி ஒன்றில் முக்கிய பதவி வகித்து வருபவர் என்பதுடன் மற்றைய அரசியல்வாதி, சுதந்திரக்கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியை வகித்து வருபவர் எனக் கூறப்படுகிறது.

இவர்கள் இருவரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தாலும் அவர்களுக்கு அந்த கட்சியில் தொகுதி அமைப்பாளர் பதவிகள் வழங்கப்படாது என பேசப்படுகிறது.

இவர்களுக்கு பதிலாக வேறு இருவரை தொகுதி அமைப்பாளர்களாக நியமிக்க ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கனவே தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலும் அடுத்த ஆண்டு பொதுத் தேர்தலும் நடைபெறவுள்ள நிலையில், பல கட்சி தாவல்கள் நடைபெறலாம் என அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# சபாநாயகருக்கு எதிராக பிரேரணை; கையொப்பமிட்டார் சஜித் பிரேமதாச

கொழும்பு, பெப். 27

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பம் திரட்டும் நடவடிக்கை நேற்று ஆரம்பமாகியுள்ளது.

நிகழ்நிலை காப்புச் சட்டத்தை நிறைவேற்றும் போது மேற்படி சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய திருத்தப் பரிந்துரைகளை சபாநாயகர் சரியாக அமுல்படுத்தாமை, அரசியலமைப்பு, பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுதல் உள்ளிட்ட பல விடயங்களை அடிப்படையாகக்கொண்டே பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர்களான உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், திஸ்ஸ அத்தநாயக்க, பாராளுமன்ற சந்திம வீரக்கொடி , ஷான் விஜயலால் டி சில்வா ஆகியோர் கையொப்பம் இட்டனர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனும் இதில் கையொப்பமிட்டார். (அ)

# மருதங்கேணி பிரதேச செயலகத்தில் உள்ளூர் உற்பத்திகளின் கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப். 27

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் வடமாகாண தொழிற்துறைத் திணைக்களத்தின் அனுசரணையில் விற்பனை கண்காட்சி நேற்றுக் காலை ஆரம்பமானது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் ஆரம்பமான குறித்த கண்காட்சி மாலை 05.00 மணிவரை இடம்பெற்றது.

இக் கண்காட்சியில், வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் வசிக்கும் சிறு தொழில் முயற்சியாளர்கள் தங்களது உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்தி அதிகளவான விற்பனையில் ஈடுபட்டனர்.

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு அவர்களது உள்ளூர் உற்பத்திகளின் தரத்தை மக்கள் மத்தியில் இலகுவாக கொண்டு சென்று உள்ளூர் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் வடமராட்சிகிழக்கு பிரதேச செயலகத்தில் ஒவ்வொரு



மாதமும் குறித்த விற்பனை கண்காட்சி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்.நகரில் வாகனம் தீக்கிரை



யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்ப்பாணம் நகரின் மத்திய பகுதியில் சிறிய ரக வாகனம் ஒன்று நேற்று திங்கட்கிழமை தீக்கிரையாகியுள்ளது.

யாழ்.மத்திய பஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள வெற்று காணி ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வாகனமே தீக்கிரையாகியுள்ளது.

தீ விபத்து ஏற்பட்டதா அல்லது குழுவினரால் தீ வைக்கப்பட்டதா என்பது தொடர்பில் தெரிய வராத நிலையில் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# சகல பிரஜைகளினதும் தகவல் திரட்ட பொலிஸார் நடவடிக்கை

கொழும்பு, பெப். 27

நாடளாவிய ரீதியில் சகல பிரஜைகளினதும் தகவல்களை சேகரிக்கும் வேலைத்திட்டமொன்றை பொலிஸ் தலைமையகம் முன்னெடுத்துள்ளது.

அதன் பிரகாரம், ஒவ்வொரு நபர் மற்றும் குடும்பங்களின் தகவல்கள், வசிக்கும் இடம், தேசிய அடையாள அட்டை எண், கிராம அலுவலர் பிரிவு போன்ற தகவல்களை உள்ளடக்கிய படிவத்தை பூர்த்தி செய்து தமது வசிப்பிடத்துக்கு உரிய பொலிஸ் நிலையத்தில் கையளிக்க அறிவுறுத்தப்படவுள்ளனர்.

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 76ஆவது பிரிவு தொடர்பில் இந்தத் தகவல்களைத் திரட்டும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

யாரேனும் ஒருவர் தற்போதைய வசிப்பிடத்துக்கு உரிய பொலிஸ் பிரிவை விட்டு வேறொரு பொலிஸ் பிரிவுக்கு உரிய பிரதேசத்துக்கு வசிப்பிடத்தை மாற்றும் சந்தர்ப்பத்தில், அது தொடர்பில் கிராம அதிகாரியின் பரிந்துரையுடன் முன்பு தகவல் வழங்கிய பொலிஸ் நிலையத்துக்கு கட்டாயம் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் பொதுமக்களை வலியுறுத்த பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

அதன் மூலம் குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மற்றும் குற்றவாளிகளை அடையாளம் காணவும், குற்றங்களை ஒடுக்கவும் இலகுவாக நடவடிக்கை எடுக்க முடியும் என்று பொலிஸ் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# இலங்கை புடைவை மற்றும் தைத்த ஆடை வீதிக் கண்காட்சி லண்டனில்

கொழும்பு, பெப். 27

முதலாவது 'இலங்கை புடைவை மற்றும் தைக்கப்பட்ட ஆடை வீதிக் கண்காட்சி' லண்டனில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, இலங்கை தைக்கப்பட்ட ஆடை விற்பனையாளர் சங்கம் மற்றும் பிரித்தானியாவிற்கான இலங்கை தூதரகம், இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த கண்காட்சி எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதிவரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சி மூலம் சிறிய அளவிலான ஆடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களும் நன்மையடைவர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச ரீதியிலான தைக்கப்பட்ட ஆடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெரிய நிறுவனங்களுடன் இணைந்து, சிறிய அளவிலான இலங்கை உற்பத்தியாளர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்த முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் சர்வதேச நிறுவனங்கள் 50 தமது காட்சிச்சாலைகளை ஸ்தாபிக்கவுள்ளதுடன், குறிப்பிட்ட வர்த்தக நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட ஆயிரக்கணக்கானவர்கள் பங்குகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# களனி பல்கலை மாணவர் ஒன்றிய இணைப்பாளர் சி.ஐ.டியால் கைது!

கொழும்பு, பெப். 27

களனி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொது முறைப்பாடுகள் பிரிவினரால் கெலும் முதன்நாயக்க கைது செய்யப்பட்டார்.

அண்மையில் பல்கலைக்கழக வளாகத்தில் புதிய மாணவர்களை பகிடிவதை செய்த சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளிநாடு செல்ல முற்பட்டபோதே அவர் கைது செய்யப்பட்டார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மீண்டும் களத்தில் ஹார்திக் பாண்ட்யா



மும்பை, பெப். 27

நீண்ட இடைவெளிக்குப் பிறகு இந்திய அணியின் சகலதுறை வீரர் ஹார்திக் பாண்ட்யா கிரிக்கெட் விளையாடுவதற்கு திரும்பியுள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் ஹார்திக் பாண்ட்யாவுக்கு காயம் ஏற்பட்டது. அதன்பின், அவர் உலகக் கிண்ணத் தொடரிலிருந்து விலகினார். காயம் காரணமாக அவர் ஓய்வெடுத்து வந்தார். இதனிடையே, ஐ. பி. எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில், நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஹார்திக் பாண்ட்யா கிரிக்கெட் விளையாடத் திரும்பியுள்ளார்.

உள்ளூர் தொடர் ஒன்றுக்காகவே பாண்ட்யா தற்போது விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உலகக் கிண்ணத்தை தவறவிடும் ரவூப்



லாகூர், பெப். 27

பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் ஹரிஸ் ரவூப் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க மாட்டார் என்று தெரிய வருகின்றது.

இருபது - 20 உலகக் கிண்ணம் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடரை அமெரிக்கா மற்றும் கனடா இணைந்து நடத்துகின்றன. 2024 உலகக் கிண்ணத் தொடரில் குழு ஏ இல் இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா, கனடா மற்றும் அயர்லாந்து அணிகள் உள்ளன.

இந்தத் தொடரில் அதிகம் எதிர்பார்க்கப்படும் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இடையேயான போட்டி ஜூன் 9ஆம் திகதி நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது.

இதில், பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் ஹரிஸ் ரவூப் விளையாடுவது சந்தேகம் என தகவல் வெளியாகி உள்ளது. பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் லாகூர் அணிக்காக விளையாடிய அவர் காயமடைந்துள்ளார்.

இந்தக் காயம் குணமாக 4 - 6 வாரங்கள் தேவைப்படும். இதனால், அவர் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க மாட்டார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

### இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட்

# நான்காவது டெஸ்டிலும் வென்று தொடரை கைப்பற்றியது இந்தியா



ராஞ்சி, பெப். 27

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியை வெற்றி கொண்டதன் மூலம் டெஸ்ட் தொடரையும் 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது இந்திய அணி.

இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 4ஆவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி கடந்த 23ஆம் திகதி ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் தொடங்கியது. முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 353 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதைத் தொடர்ந்து முதல் இன்னிங்ஸை விளையாடிய இந்திய அணி 2ஆம் நாள் ஆட்ட நேர இறுதியில் 7 விக்கெட் இழப்புக்கு 219 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இதையடுத்து நேற்று முன்தினம் காலை 3ஆம் நாள் ஆட்டத்தை இந்திய வீரர் துருவ் ஜூரெல் 30 ஓட்டங்களுடனும் குல்தீப் யாதவ் 17 ஓட்டங்களுடனும் தொடங்கினர்.

குல்தீப் யாதவ் 28 ஓட்டங்கள் எடுத்த நிலையில், ஜேம்ஸ் அண்டர்சன் பந்துவீச்சில் போல்ட் ஆனார். இதைத் தொடர்ந்து விளையாட வந்த ஆகாஷ் தீப் 9 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், சொஹைப் பஷிர் பந்துவீச்சில் எல். பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

ஆனால், மறுமுனையில் அபாரமாக விளையாடிய துருவ் ஜூரெல் அரைச்சதம் கடந்தார். அவர் சதத்தை நெருங்கிய வேளையில் துரதிர்ஷ்டவசமாக 90 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரின் விக்கெட்டை ரொம் ஹார்ட்லி வீழ்த்தினார். அவர் 6 பௌண்ட்ரிகளும், 4 சிக்ஸர்களும் அடங்கும். இதையடுத்து இந்திய அணி 103.2 ஓவர்களில் 307 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இங்கிலாந்து தரப்பில் சொஹைப் பஷிர் 5 விக்கெட்களையும் ரொம் ஹார்ட்லி 3 விக்கெட்களையும் ஜேம்ஸ் அண்டர்சன் 2 விக்கெட்களையும் சாய்த்தனர்.

இதையடுத்து, முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 46 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. பின்னர் 2ஆவது இன்னிங்ஸை இங்கிலாந்து அணி தொடர்ந்து விளையாடியது. ஆனால், ரவிச்சந்திரன் அஸ்வின், குல்தீப் யாதவ், ஜடேஜாவின் அபார பந்துவீச்சால் இங்கிலாந்து அணி நிலைகுலைந்தது. பென் டக்கெட், ஒல்லி போப், ஜோ ரூட் ஆகியோரின் விக்கெட்களை அஸ்வின் வீழ்த்தி அந்த அணிக்கு அதிர்ச்சியை அளித்தார்.

அந்த அணியில் ஜாக் கிராவ்லி மட்டுமே நிலைத்து நின்று விளையாடினார். அவர் 60 ரன்கள் சேர்த்த நிலையில், குல்தீப் யாதவ் பந்தில் போல்ட் ஆனார். இதைத் தொடர்ந்து ஜொன்னி பெயர்ரோவின் விக்கெட்டை ஜடேஜா கைப்பற்றினார். பெயர்ஸ்ரோ 30 ஓட்டங்கள் சேர்த்தார்.

பென் ஸ்ரோக்ஸ் 4, ரொம் ஹார்ட்லி 7, ஒல்லி றொபின்சன் 0 என்ற நிலையில் குல்தீப் யாதவின் அபார பந்துவீச்சில் வீழ்ந்தனர். கடைசியாக பென் போக்ஸ், ஜேம்ஸ் அண்டர்சன் ஆகியோரின் விக்கெட்களை அஸ்வின் கைப்பற்றினார்.

இதனால் 53.5 ஓவர்களில் 145 ஓட்டங்களுக்கு இங்கிலாந்தின் 2ஆவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. 2ஆவது இன்னிங்ஸில் இந்திய அணி தரப்பில் அஸ்வின் 5 விக்கெட்களை கைப்பற்றி இங்கிலாந்து அணியின் சரிவுக்குக் காரணமானார். குல்தீப் யாதவ் 4 விக்கெட்களையும், ஜடேஜா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து 192 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி 2ஆவது இன்னிங்ஸை விளையாடியது. 3ஆம் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்திய அணி 8 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 40 ஓட்டங்கள் எடுத்தது. ரோஹித் சர்மா 24 ரன்களுடனும், யஷஸ்வி ஜெய்ஸ்வால் 16 ஓட்டங்களுடனும் நேற்று நான்காவது நாளை தொடர்ந்தனர். பொறுப்பாக விளையாடியது இக்கூட்டணி.

37 ஓட்டங்கள் எடுத்திருந்த ஜெய்ஸ்வால் அடித்த பந்தை அசாத்தியமாக பிடியெடுத்த அண்டர்சன் அவரை ஆட்டமிழக்க வைத்தார். ரூட் பந்தில் முதல் விக்கெட்டானர் ஜெய்ஸ்வால். மறுபக்கம் ரோஹித் சர்மா நிதானத்துடன் விளையாடி அரைச்சதம் கடந்தார். எனினும், அவர் ரோஹித் நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

ரோஹித் 55 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, ரஜத் படிதார் 0, ஜடேஜா 4 ஓட்டங்கள், சர்ஃப்ராஸ் கான் 0 என அடுத்தடுத்து இந்திய அணி விக்கெட்களை இழந்தது. எனினும், மூன்றாவது வீரராக இறங்கிய ஷுப்மன் கில், அறிமுக வீரர் துருவ் ஜூரெல் உடன் இணைந்து இந்திய அணியை வெற்றிப்பாதைக்கு நோக்கி அழைத்து சென்றார்.

இருவரும் பொறுப்பாக விளையாடி பௌண்ட்ரிகளை விரட்டி வெற்றியைத் தேடித்தந்தனர். 61 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 5 விக்கெட் இழப்புக்கு 192 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது. ஷுப்மன் கில் 52 ஓட்டங்கள், துருவ் ஜூரெல் 39 ஓட்டங்கள் எடுத்து வெற்றிக்கு உதவினர். இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக சொஹைப் பஷிர் 3 விக்கெட் வீழ்த்தினார்.

நடப்பு டெஸ்ட் தொடரில் இந்தியா பெறும் மூன்றாவது வெற்றி இதுவாகும். இதன்மூலம் 5 போட்டிகள் டெஸ்ட் தொடரை 3 - 1 என்ற கணக்கில் இந்திய அணி கைப்பற்றியுள்ளது.

(ஐ)

# கவாஸ்கரின் சாதனையை முறியடித்தார் ஜெய்ஸ்வால்



ராஞ்சி, பெப். 27

தான் விளையாடிய முதல் 8 டெஸ்ட் போட்டிகளில் 971 ஓட்டங்களை குவித்து ஜெய்ஸ்வால் சுனில் கவாஸ்கரின் சாதனையை முறியடித்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின் மூலம் இந்திய அணியின் யஷஸ்வி ஜெய்ஸ்வால் புதிய சாதனை படைத்துள்ளார்.

இதுவரை 8 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள யஷஸ்வி ஜெய்ஸ்வால் 971 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதன் மூல சுனில் கவாஸ்கரின் சாதனையை முறியடித்துள்ளார்.

கவாஸ்கர் தன் முதல் 4 டெஸ்ட் போட்டிகளில் 774 ரன்களை எடுத்து 8 டெஸ்ட் போட்டிகளில் 938 ஓட்டங்களை எடுத்திருந்ததுதான் 8 டெஸ்ட் ஓட்டங்களில் சாதனையாக இருந்தது. இப்போது ஜெய்ஸ்வால் இந்த மகுடத்தை சூட்டிக் கொண்டார்.

ஒட்டுமொத்தமாக தொன் பிராட்மன் தன் முதல் 8 டெஸ்ட் போட்டிகளில் 1210 ஓட்டங்களை எடுத்து முடிசூடா மன்னனாகத் திகழ்கிறார். தொன் பிராட்மனுக்கு அடுத்த இடத்தில் ஜெய்ஸ்வால் இப்போது சாதனையாளராக மிளிர்கிறார்.

(ஐ)

# இம்ரான் ஆட்சி கவிழ்ப்பில் அமெரிக்கா சதி?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



## பாகிஸ்தானில் இராணுவ பொம்மை அரசு !

பாகிஸ்தானில் நடைபெற்ற பொதுத்தேர்தல் முடிவுகள் இராணுவத்திற்கும், மேற்கத்தய அரசுக ளுக்கும் அதிர்ச்சியை அளித்துள்ளதாகத் தெரிகிறது.

பாகிஸ்தானில் ஆட்சியில் இருந்த இம்ரான்கானின் ஜனநாயக அரசு சூழ்ச்சி கரமாக கவிழ்க்கப்பட்டதாகவும், இந்தச் சதியைத் திட்டமிட்டது அமெரிக்கா தான் என இம்ரான்கான் பகிரங்கமாகவே குற்றம் சாட்டியிருந்தார்.

அது மட்டுமின்றி, இம்ரான்கான் மீது பாகிஸ்தான் அரசு பலவிதமான குற்றச் சாட்டுகளைச் சுமத்தி 34 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து சிறையில் அடைத்தது. அவர் கிரிக்கெட் வீரர் என் றபடியால் தனது கட்சியின் தேர்தல் சின் னமாக வைத்திருந்த கிரிக்கெட் மட்டை சின்னத்தையும் முடக்கியது. இருந்தும் அவரது கட்சி தேர்தலில் சுயேட்சையா கப் போட்டியிட்டு ஆகக்கூடுதலான தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளனர்.

இம்ரான்கானின் வெற்றி பாகிஸ்தா னின் ஆட்சியாளர்களுக்கும், அவர்களின் இராணுவ அதிகார வர்க்கத்துக்கும் மரண அடி கொடுத்துள்ளது. அத்துடன் அமெ ரிக்க, மேற்கத்தய அரசுகளுக்கும் ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளது.

**அமெரிக்காவின் உள் விவகார தலையீடு:**


இம்ரான் கான் அமெரிக்கா மீது கூறி யுள்ள குற்றச்சாட்டு எவ்வாறு இருப்பி னும், அமெரிக்கா பலமுறை பாகிஸ்தான் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட் டுள்ளது.

அமெரிக்கா மற்ற நாடுகளில் ஆட்சி மாற்றத்திற்கு காரணமாக இருக்கிறது. 1953 ஆம் ஆண்டு, ஈரான் நாட்டில் முக மது முஸ்தாக் ஆட்சியை கலைத்தது. பானமாவில் நடந்த ஆட்சி மாற்றம் துருக்கி முதல் ஈராக் வரை அமெரிக்கா பல நாடுகளில் பல மாற்றங்களை செய் துள்ளமை அறிந்ததே.

பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரங் களில் அமெரிக்கா பல முறை தலையிட் டிருப்பதற்கு உதாரணங்கள் உள்ளன. 1958 ஆம் ஆண்டு, ஜெனரல் அயூப் கான் ஆட்சிக்கு வந்தார். அதன்பிறகு ஜெனரல் யாஹ்யா கான், ஜெனரல் ஸிஹாஹுல் ஹக் மற்றும் ஜெனரல் பர்வேஸ் முஷ ராப் ஆகியோருக்கு அமெரிக்காவின் ஆதரவு பலமாக இருந்தது.

சீனா போன்ற நாடுகளுக்கு எதிராக உள்ள அமெரிக்காவின் வெளியுறவு கொள் கைக்கு இவர்களை பயன்படுத்திக்கொண் டது. ஆப்கானிஸ்தானுக்கு எதிராகவும், தீவிரவாதத்திற்கு எதிராகவும் நடந்த யுத் தத்திற்கு, அமெரிக்கா பாகிஸ்தானை பயன்படுத்திக் கொண்டது கடந்த கால வரலாறாகும்.

பாகிஸ்தானில் ராணுவத்தில் உள்ள தலைவர் ஒருவரையோ ஆட்சியில் இருக்க அமெரிக்கா விரும்புகிறது. எகிப் தில் அப்துல் ஃபதேஹ் அல்-சிசி ஆட்சி அமைத்தது போல், சீனாவை எதிர் கொள்ள பாகிஸ்தான் அரசை சார்ந்து இருக்க வேண்டிய நிலையை மாற்றவே, ஆட்சி மாற்றத்தை அமெரிக்கா விரும்பி யது.



2024 Pakistani General Election

பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீஃப் ஆட் சியில் இருந்தபோது அமெரிக்கா இதை செய்ய முயற்சி செய்தது. பெனாசிர் புட்டோ ஆட்சி, இம்ரான் கான் ஆட்சி என அனைவரது ஆட்சியிலும் அமெரிக் காவுக்கு கடினமாக இருந்தது. இதனால் அமெரிக்கா தன் தேவைகளை நிறைவேற்ற அங்கு ஒரு ராணுவ தலைவரை ஆட்சிக்கு கொண்டு வர அமெரிக்கா விரும்பியது.

**நெருக்கடியில் பாகிஸ்தான் பொருளாதாரம் :**

பாகிஸ்தானில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளம், தொடர்ச்சியாக நீடித்து இருக் கும் பொருளாதார நெருக்கடி என பாகிஸ் தான் கடும் பாதிப்புகளை சந்தித்து வந்தது. இதன் தொடர்ச்சியாக, அதன் பிரதமர் இம்ரான் கான் மீது எழுப்பப்பட்ட ஊழல் குற்றச்சாட்டு, நம்பிக்கை வாக்கெ டுப்பில் தோல்வி என அரசியல் பேரிடரி லும் பாகிஸ்தான் சிக்கியிருந்தது. இதிலி ருந்து நாடு மீள நாடாளுமன்ற பொதுத் தேர்தலை நடத்துவதுதான் ஒரே வழி என தேர்தல் அறிவிக்கப்பட்டது.



தேர்தலுக்கு ஒரு நாளைக்கு முன்னர் இரட்டை குண்டு வெடிப்பு சம்பவம் நடந்ததால், தேர்தல் அமைதியான முறை யில் நடத்தப்படுமா என்கிற கேள்வியும் எழுந்தது. இருப்பினும் நாடு முழுவதும் இன்டெர்நெட் சேவை முடக்கப்பட்டு தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது.

பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் நாடாளுமன்றத் தேர்தலின் இறுதி முடிவு களின்படி நடந்து முடிந்த தேர்தலில் சுயேச்சை வேட்பாளர்கள் 101 பேர் வெற்றி பெற்றுள்ளனர். அவர்களில் 90 பேர் முன்னாள் பிரதமர் இம்ரான் (Imran Khan) கானின் தரீக்கே இன்ஸாஃப் கட்சியின் ஆதரவாளர்கள் ஆவார்கள்.

**புதிய பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் :**

பாகிஸ்தானின் புதிய பிரதமர் ஷெ பாஸ் ஷெரீப்பையும், பஞ்சாப் மாகாண முதல்-மந்திரியாக மரியம் நவாசையும் நியமிப்பதாக நவாஸ் ஷெரீப் தெரிவித் துள்ளார்.

முன்னாள் பிரதமர் நவாஸ் ஷரீஃபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி 75 இடங் களைக் கைப்பற்றியது. பாகிஸ்தான் மக் கள் கட்சியும் 54 தொகுதிகளை வென் றது.

பாகிஸ்தான் தேர்தலில் எந்த கட்சிக் கும் ஆட்சி அமைக்கும் அளவுக்கு பெரும் பான்மை கிடைக்கவில்லை. மொத்தம் 854 தொகுதிகளில் நாடாளுமன்ற மற்றும் மாகாண தேர்தல் நடந்தது. இதில் அதிக பட்சமாக 348 சுயேச்சைகள் வெற்றி பெற் றுள்ளனர். இவர்களில் பெரும்பாலான வர்கள் முன்னாள் பிரதமரும் பாகிஸ்தான் தெஹ்ரிக் இன்சாப் கட்சி தலைவருமான இம்ரான் கானின் பிடிஐ கட்சியை சேர்ந் தவராவார்கள். கட்சியின் கிரிக்கெட் பேட் சின்னம் மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் சுயேச்சையாக களமிறங்கியிருந்தனர்.

கட்சிகளைப் பொறுத்த வரையில், முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் (பிஎம் எல்-என்) 227 இடங்களில் வெற்றி பெற்று, அதிக தொகுதிகளை வென்ற கட்சியாக உள்ளது. பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) 160 இடங்களிலும், எம்க்யூஎம்- பி கட்சி 45 இடங்களிலும் வென்றுள்ளன.

**சுயேச்சைகள் நாடாளுமன்ற தேர்தலிலும் வெற்றி!**

நாடாளுமன்ற தேர்தலைப் பொறுத்த வரையில், வாக்குப்பதிவு நடந்த 265 தொகுதிகளில் சுயேச்சைகள் 101 தொகு திகளில் வென்றுள்ளனர். நவாஸ் கட்சி 75 இடங்களிலும், பிபிபி கட்சி 54 இடங் களிலும், எம்க்யூஎம்-பி கட்சி 17 இடங் களிலும் வென்றுள்ளன. மத்தியில் ஆட்சி அமைக்க 265 இடங்களில் 133 தொகுதி களில் வெல்ல வேண்டியது அவசியம்.

இதனுடன், பெண்கள் மற்றும் சிறு பான்மையினருக்கான நியமன இடங்களையும் சேர்த்து மொத்தமுள்ள 336 தொகுதிகளில் 169 இடங்களை கைப் பற்ற வேண்டும். ஆனால் ஆட்சி அமைக் கும் அளவுக்கு எந்த கட்சிக்கும் பெரும் பான்மை வெற்றி கிடைக்காததால், கூட் டணி ஆட்சி அமைக்க நவாஸ் கட்சி தீவிர முயற்சி எடுத்தார் என்பது முக்கிய மானதாகும். ●




# மாலைதீவு சென்றுள்ள சீன கப்பல் ஒரு மாதம் மறைந்திருந்தது ஏன்?

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சீன ஆராய்ச்சிக் கப்பல் கடந்த வியாழக்கிழமை (பிப்ரவரி 22) மாலத்தீவு சென்றடைந்தது. இந்தக் கப்பல் கடந்த ஒரு மாதமாக இந்தியப் பெருங்கடலில் இருந்தது.

இது குறித்து மாலத்தீவு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

பி.டி.ஐ செய்தி நிறுவனத்தின் அறிக்கையின்படி, இந்தியா மற்றும் இலங்கையின் கடலோர காவல்படை கப்பல்களும் ராணுவ பயிற்சிக்காக அப்பகுதியை வந்தடைந்த அதே நாளில் சீனக் கப்பல் மாலத்தீவை அடைந்துள்ளது.



இந்தியப் பெருங்கடலில் உள்ள இந்தக் கப்பல் குறித்து இந்தியா முன்னர் கவலை தெரிவித்திருந்ததுடன், கொழும்பு துறைமுகத்தில் கப்பலை நிறுத்த மறுக்கும்படி இலங்கைக்கு அழுத்தம் கொடுத்திருந்தது.



மாலத்தீவு ஊடகக் குழு பதிப்பின் அறிக்கையை மேற்கோள் காட்டி, சீன ஆராய்ச்சிக் கப்பல் வியாழக்கிழமை மாலத்தீவு சென்றடைந்ததாக பி.டி.ஐ செய்தி நிறுவனம் எழுதியுள்ளது. பிற்பகலில் திலாஃபுஷி அருகே கப்பல் காணப்பட்டது.

### சீன கப்பல் ஒரு மாதம் மறைந்திருந்தது ஏன்?

மாலத்தீவு செய்தி இணையதளமான ஆதாதூவை மேற்கோள் காட்டி, செய்தி நிறுவனமான பி.டி.ஐ., ஜனவரி மாதம் மாலத்தீவு அதிபர் முகமது முய்சு சீனாவுக்குச் சென்ற 24 மணி நேரத்திற்குப் பிறகு இந்த சீனக் கப்பல் தனது பயணத்தைத் தொடங்கியதாக எழுதியுள்ளது.

மாலத்தீவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் சுமார் ஒரு மாத காலம் கழித்து அந்தக் கப்பல் பிப்ரவரி 22 அன்று மாலே அருகே காணப்பட்டது.

ஜனவரி 22-ஆம் தேதி முதல் இந்த சீனக் கப்பல் ரேடாரில் எங்கும் தென்படவில்லை என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த கப்பலின் கண்காணிப்பு அமைப்பு ‘ஸ்விட்ச் ஆஃப்” செய்யப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

முய்சு சீனாவுக்கு ஆதரவானவராகக் கருதப்படுகிறார். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மாலத்தீவு அதிபராக முய்சு பதவியேற்றார். ‘இந்தியா வெளியேறு” என்ற முழக்கத்தை தேர்தலின்போது பயன்படுத்தியிருந்தார் முய்சு.

மாலத்தீவு அதிபராக பதவியேற்ற பிறகு, முய்சு இன்னும் இந்தியாவுக்கு வரவில்லை. அவர் சமீபத்தில் சீனாவுக்கு தனது முதல் அதிகாரப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

முன்னதாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம், துருக்கி அதிபர் ரெசெப் தையிப் எர்டோகனின் அழைப்பின் பேரில் அவர் துருக்கிக்கு விஜயம் செய்தார்.

### அமெரிக்க சிந்தனை திணைக்களத்தின் குற்றச்சாட்டு என்ன?

சீனா ‘அறிவியல் ஆராய்ச்சிக் கப்பல்” என்று அழைக்கும் கப்பல் உண்மையில் கடலில் இருந்து தரவுகளை சேகரிக்கிறது என்று அமெரிக்காவின் சிந்தனை திணைக்களம் ஒன்று குற்றம் சாட்டியுள்ளது.

இந்தக் கப்பல் ராணுவ நோக்கங்களுக்காக, குறிப்பாக நீர்மூழ்கிக் கப்பல்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கிறது என்று அந்தச் சிந்தனை திணைக்களம் கூறியது.

இந்த குற்றச்சாட்டுகளை சீனா நிராகரித்து வருகிறது. இந்தக் கப்பல் ஐக்கிய நாடுகள் சபையின் கடல் தொடர்பான சட்டத்தின் கீழ் மட்டுமே இயங்குகிறது என்கிறார்.

இந்த ஆராய்ச்சிக் கப்பலுக்கு இந்த ஆண்டு ஜனவரி 23-ஆம் தேதி மாலத்தீவு அரசு அனுமதி வழங்கியது. இந்தக் கப்பல் மாலத்தீவு கடற்பரப்பில் தங்கியிருந்து எந்தவிதமான ஆய்வுப் பணிகளையும் மேற்கொள்ளாது என்று மாலத்தீவு வெளியுறவு அமைச்சகம் தெரிவித்திருந்தது.

எனினும், இந்த கப்பலின் நகர்வுகளை இந்தியா கண்காணித்து வருவதாக இந்திய பாதுகாப்புத் துறை தொடர்பான ஆதாரங்களை மேற்கோள் காட்டி பி.டி.ஐ எழுதியிருந்தது.


இம்மாதம், சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின், “கடந்த சில ஆண்டுகளில் சுற்றியுள்ள கடல்களில் சீனாவின் அறிவியல் ஆராய்ச்சி நடவடிக்கைகள் அமைதியின் நோக்கத்திற்காகவும், மனிதகுலத்தின் பார்வையில் இருந்து அறிவியல் புரிதலை மேம்படுத்துவதற்காகவும் உள்ளன,” எனக் கூறினார்.

### சீனக் கப்பலுக்கு அனுமதி மறுத்த இலங்கை

முன்னதாக சீனக் கப்பல் இலங்கை துறைமுகத்தில் தரையிறங்க அனுமதி கோரியிருந்த நிலையில், அதற்கு இலங்கை மறுப்பு தெரிவித்திருந்தது.

இந்த ஆண்டு ஜனவரி 5-ஆம் தேதி, சீனக் கப்பல்கள் நுழைவதற்கு இலங்கை தடை விதித்ததுடன், இலங்கைக் கடற்பரப்பிற்குள் வெளிநாட்டுக் கப்பல்கள் வருவதற்கு ஓராண்டு தடை விதித்துள்ளதாகவும் கூறியது.

முன்னதாக, அண்டை நாடுகளின் எல்லைக்குள் சீனக் கப்பல்கள் செல்வது குறித்து இந்தியா கவலை தெரிவித்திருந்தது.



2022-ஆம் ஆண்டு யுவான் வாங் 5 என்ற சீன ராணுவக் கப்பல் கொழும்பை வந்தடைந்தது. ராக்கெட் மற்றும் ஏவுகணை தாக்குதல்களை கண்காணிக்கும் திறன் கொண்ட இந்த கப்பல் இலங்கைக்கு வருவது குறித்து இந்தியா கவலை தெரிவித்திருந்தது.



இதனை ‘உளவுக்கப்பல்” என்று கூறிய இந்தியா, இலங்கை அரசிடம் முறைப்படி தனது ஆட்சேபனையை தெரிவித்தது.

இந்தியாவின் பெயரைக் குறிப்பிடாமல், ‘பாதுகாப்புக் காரணங்களைக் கூறி இலங்கை மீது அழுத்தம் கொடுக்கப்படுகிறது, இது நியாயமற்றது,” என்று சீனா கூறியது.

### மாலத்தீவு குறித்து இந்தியாவின் கவலை என்ன?

மாலத்தீவு இந்தியாவின் மேற்கு கடற்கரையிலிருந்து 300 கடல் மைல் தொலைவில் உள்ளது, அதே சமயம் இந்தியாவின் லட்சத்தீவு குழுமத்தின் மினிகாய் தீவில் இருந்து 70 கடல் மைல் தொலைவில் உள்ளது.

(16ம் பக்கம் பார்க்க)

# மாலைதீவு சென்றுள்ள சீன கப்பல்...






(15ம் பக்கத் தொடர்ச்சி)

புவியியல் ரீதியாக, மாலத்தீவின் இருப்பிடம் இந்தியாவிற்கும் உலகளாவிய வர்த்தகத்திற்கும் மிகவும் முக்கியமானது. இது இந்தியப் பெருங்கடலின் ஒரு பகுதியில் உள்ளது, அங்கு உலகளாவிய கப்பல் பாதைகள் கடந்து செல்கின்றன.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் இந்தியாவின் முக்கிய நட்பு நாடாக மாலத்தீவு இருந்து வருகிறது. அண்டை நாடுகளுக்கு முக்கியத்துவம் தரும் கொள்கை மற்றும் பாதுகாப்பு மற்றும் பிராந்தியத்தில் அனைவருக்கும் வளர்ச்சி (சாகர்) போன்ற மோடி அரசாங்கத்தின் பிரச்சாரங்களில் இது ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

மாலத்தீவுகள் சீனாவின் பக்கம் சாயவது இந்தியாவுக்கு கவலையளிக்கும் விஷயம். ஜனாதிபதியான பிறகு, தனது அனைத்து படைகளையும் திரும்பப் பெறுமாறு இந்தியாவிடம் முய்சு கேட்டுக் கொண்டார், ஆனால் சமீபத்தில் இந்திய வெளியுறவு அமைச்சகம் மார்ச் 10-ஆம் தேதிக்குள் ஒரு தளத்தில் இருந்தும், மே 10-ஆம் தேதிக்குள் மீதமுள்ள இரண்டு தளங்களில் இருந்தும் இந்திய ராணுவம் திரும்பப் பெறப்படும் என்று கூறியது. இதன் பிறகு, விமான தளத்தை இந்திய வீரர்களுக்கு பதிலாக இந்திய தொழில்நுட்ப குழு கையாளும்.

மாலத்தீவில் தற்போது 77 இந்திய வீரர்கள் உள்ளனர், அவர்கள் கடல் கண்காணிப்புக்காக ஒரு டொனேர் 228 விமானத்தையும், மருத்துவ உதவிக்காக இரண்டு ஹெச்.ஏ.எல் துருவ் ஹெலிகாப்டர்களையும் இயக்குகின்றனர்.

மாலத்தீவு, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் கடலோர காவல்படையினர் மூன்று நாடுகளின் கூட்டுப் பயிற்சியை வியாழக்கிழமை தொடங்கினர்.

தோஸ்தி-16 என பெயரிடப்பட்ட இந்த ராணுவ பயிற்சியில் பார்வையாளராக பங்களாதேஷ் பங்கேற்றது.

இத்தகவலை சமூக வலைதளங்களில் அளித்துள்ள மாலத்தீவு தேசிய பாதுகாப்புப் படை (எம்.என்.டி.எஃப்), “இந்தியா மற்றும் இலங்கை கப்பல்கள் வரும் 22-ஆம் தேதி முதல் 25-ஆம் தேதி வரை நடைபெற உள்ள ‘தோஸ்தி-16’ என்ற மூன்று நாடுகளின் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்பதை வரவேற்கிறோம். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த பயிற்சியில், மூன்று நாடுகளின் ராணுவத்தினரிடையே ஒருங்கிணைப்பை அதிகரிக்கவும், கடலில் நடக்கும் சம்பவங்களை கூட்டாக கையாள்வதற்கான வழிகளை கண்டறியவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்,” எனக் கூறியுள்ளது.

தோஸ்தி ராணுவப் பயிற்சிகள் 1991-இல் தொடங்கின. கடந்த 2012-ஆம் ஆண்டு முதன்முறையாக இலங்கை இதில் கலந்து கொண்டது. முன்னதாக, இந்த ராணுவப் பயிற்சி 2021-இல் நடந்தது.

